Saturday மெயில்
A Fascinating Weekly Bulletin
සැටඩේ මේල්
02 - 50
23-10-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# உலகில் மூவரில் ஒருவர் இணையப் பாவனையாளர்




அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உப அதிபர் பதவிக்கு ஹிலாரி கிளின்டன்?

ஆறு வருடங்களுக்குப்பிறகும் ஹிலாரி கிளின்டன் வயோதிபமடையாமல் இருப்பாரா...

அமெரிக்காவில் அடுத்து இடம்பெறப் போகும் அதிபர் தேர்தல் தொடர்பான செய்திகள் இப்போதே பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது. அடுத்த தேர்தலில் தற்போதைய அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரான ஹிலாரி கிளின்டன் உப அதிபர் பதவிக்குப் போட்டியிடுவார் என்றும் இப்போதைய உப அதிபரான ஜோபிடன் இப்போது ஹிலாரி வகிக்கும் வெளிநாட்டு அமைச்சர் பதவிக்கு மாற்றப் படுவார் என்றும் பரவலாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹிலாரி கிளின்டன் உப அதிபர் பதவிக்குப் போட்டியிட்டால் அவருக்கு ஒரு வாய்ப்புள்ளது. ஒபாமாவின் இரண்டு பருவ ஆட்சி முடிவடைந்த பின் வரும் தேர்தலில் அதிபர் பதவிக்குப் போட்டியிடும் வாய்ப்பு மீண்டும் ஹிலாரி கிளின்டனுக்குக் கிடைக்கும் என்ற கோணத்தில் இக்கருத்து ஜோடிக்கப்பட்டிருந்தது.

மாறாக வெளிநாட்டு அமைச்சர் பதவிக்குரிய பிரகாசத்தை ஹிலாரி கிளின்டன் வழங்கவில்லை என்ற கருத்தும் தற்போதைய உப அதிபர் கூட ஓர் இறப்பர் முத்திரை போலவே காணப்படுவதையும் வெளிப்படையாகப் பேச விரும்பாத ஊடகங்கள் இவ்வாறு பேச முற்பட்டுள்ளதாகவும் கருதப்படுகிறது. இருவரையும் பதவி மாற்றிப் போட்டாவாவது கதிரைகளுக்குப் பாரமில்லாமல் இருப்பார்கள் என்றும் கருத இடமிருக்கிறது.

இது பற்றி அமெரிக்க பத்திரிகையான நஷனல் ஜேர்ணலுக்கு செவ்வி வழங்கிய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இக்கருத்தை மறுத்துரைத்தார். இருவரும் செய்ய வேண்டிய எதிர்காலப் பணிகள் நிறையவே உள்ளன என்று கூறிய அவர், இந்தப் பதவிமாற்றக் கருத்தை மறுத்துரைத்தார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே வயதாகிவிட்டதெனக் கருதப்பட்ட ஹிலாரி கிளின்டன் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குப் பின்னும் இளமையாக இருப்பாரா என்பதை பத்திரிகையாளர்கள் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

இது இவ்விதமிருக்க...

அமெரிக்க உளவுப்பிரிவான சி.ஐ.ஏ.க்கு ஜோர்தானியர் ஒருவர் அல்வா கொடுத்த நிகழ்வும் இவ்வாரம் நடந்தேறியுள்ளது. சி.ஐ.ஏ.யின் கணிப்புகள் பல தவறாக இருப்பதாக குறைகூறப்பட்டு வந்த நிலையில் இந்தச் சம்பவம் அவர்களுடைய ஆற்றலுக்குப் பலத்த அடியாகியிருக்கிறது.

ஜோர்தானியர் ஒருவர் ஆப்கானிஸ்தானில் உள்ள பயங்கரவாத வலையமைப்புப் பற்றிய தகவல்களைத் தருவதாக சி.ஐ.ஏ.க்கு அல்வா கொடுத்திருக்கிறார். இவரை உடனடியாக வரும்படி அழைத்துள்ளனர். அவர் ஆப்கானில் உள்ள அமெரிக்க முகாம் ஒன்றுக்குள் சென்றுள்ளார். அவரை அமெரிக்கப் படைகள் ஆவலுடன் வரவேற்றுள்ளனர். அந்த நேரம் பார்த்து மடியில் இருந்த தற்கொலைக் குண்டை வெடிக்க வைத்துள்ளார் ஜோர்தானிய நபர். சுற்றுவர நின்ற ஏழு அமெரிக்கர் பரகதியடைந்துள்ளனர். தகவல் சொல்ல வருவதாக ஏமாற்றி வந்த தற்கொலைக் குண்டுதாரியை கணிப்பிடத் தவறியது சி.ஐ.ஏ.யின் தகுதிக்குறைவுக்கு நல்ல உதாரணம் என்றும் இன்றைய செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## உலகில்...

இவ்வருட இறுதியில் உலக சனத்தொகையில் மூன்றில் ஒருவர் இணையப் பாவனையாளர்களாக இருப்பார்கள் என ஐக்கிய நாடுகளின் ஆய்வறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

கடந்த 5 வருடங்களில் இணையப் பாவனையாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதாவது 2 ஆயிரம் மில்லியன்களாக அதிகரித்துள்ளது.

226 மில்லியன் பேர் புதிதாக இவ்வருடத்தில் இணையத்தைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். இவர்களில் அநேகர் வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

மேற்படி அறிக்கையின்படி வருட இறுதியில் மேலைத்தேய நாடுகளின் சனத்தொகையில் 71 வீதமானோர் இணையப் பாவனையாளர்களாக இருப்பார்கள்.

மேலும், மொபைல் இணையம் மற்றும் புரோட்பேண்ட் (Broadband) ஆகியன வேகமாக வளர்ந்து வருவதாகவும் இது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உந்துதலாக உள்ளதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களிடமிருந்து ஒரு செக்கனுக்கு 2 இலட்சம் குறுந்தகவல்கள் அனுப்பப்படுவதாக ஐக்கிய நாடுகளின் சர்வதேச தொலைத் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1.8 த்ரில்லியன் குறுந்தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தற்போது 2010 ஆம் ஆண்டில் 6.1 த்ரில்லியனாக அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில்,ஒவ்வொரு செக்கனுக்கும் 14 ஆயிரம் டொலர்களும் ஒவ்வொரு நிமிடத்துக்கும் 8,12,000 டொலர்களும் வருமானப் பரிமாற்றம் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**டில்லியில் மக்கள் தொகையைவிட செல்போன் எண்ணிக்கை அதிகம்**

இது இவ்வாறிருக்க இந்தியாவில் செல்போன் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்தபடி உள்ளது. குறிப்பாக தலைநகர் டில்லியில் செல்போன்கள் எண்ணிக்கை ஆச்சரியப்படும் வகையில் அதிகரித்துள்ளது. டில்லியில் தினமும் சராசரியாக 17 ஆயிரம் செல்போன் இணைப்புகள் வாங்கப்படுகின்றன. அங்கு ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 2 செல்போன்கள் வைத்துள்ளனர். டில்லி மக்கள் தொகை ஒரு கோடியே 83 இலட்சமாகும்.

கடந்த மார்ச் மாதம் எடுத்த கணக்கெடுப்பின்படி டில்லியில் 2 கோடியே 83 இலட்சம் செல்போன்கள் பயன்பாட்டில் உள்ளன. இது மக்கள் தொகையை விட கூடுதலாக ஒரு கோடி செல்போன்கள் இருந்துள்ளதுடன், தற்போது செல்போன்கள் எண்ணிக்கை 3 கோடியைத் தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

# 'சக்தி மிக்க எதிர்க்கட்சி இல்லாததே தற்போதைய பாராளுமன்றத்தில் பெரியகுறை'



'நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றத்தை பயனுள்ளதாக பயன்படுத்திக் கொள்ளப் பலரும் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதேநேரம், ஒருசிலர் மட்டும் அதை தவறாகப் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயம்' என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய எம்.பி.யான மாலினி பொன்சேகா தெரிவித்தார்.

Saturday மெயிலுக்கு வழங்கிய பேட்டியிலேயே மாலினி பொன்சேகா இந்தக் கருத்தை வெளியிட்டார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு:

**கேள்வி: உங்களது குடும்பம் மற்றும் கல்வி பின்னணி பற்றி?**

**பதில்:** நான் பிறந்தது களனி,வராகொட பகுதியில். களனி,குருகுல வித்தியாலயத்தில் எனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டேன். எனது குடும்பத்தில் நான் உட்பட 11 சகோதர, சகோதரிகள் இருக்கின்றனர். நான் பாடசாலைகளில் இருக்கும்போது மேடை நாடகங்களில் நடித்திருக்கிறேன். அதன் பின்னர் எனது நாட்டிய ஆசிரியர் மூலமாக வாய்ப்புப் பெற்று வெளியில் வந்து திரைப்படத்துறைக்கும் பிரவேசித்தேன். நான் நடித்த முதலாவது திரைப்படம் 1967 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதுவரை சுமார் 150 திரைப்படங்களில் நடித்துள்ளேன்.

இவற்றில் 2 வெளிநாட்டுப் படங்களும் அடங்கும். இலங்கை, இந்திய முதல் கூட்டுத் தயாரிப்பான பைலட் பிரேமநாத் படத்தில் சிவாஜிகணேசனுடன் நடித்தேன். பின்னர் முதல் இலங்கை–பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்புப் படமொன்றிலும் நடித்தேன்.

**கேள்வி: அரசியல் பிரவேசத்துக்கான உங்களது நோக்கம்?**

**பதில் :** எமது நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலைகள் காரணமாக எனக்கு ஆரம்பத்தில் இருந்தே அரசியலில் ஆர்வம் இருக்கவில்லை. நாம் இனநெருக்கடிப் பிரச்சினைக்கு முகங்கொடுத்திருந்தோம். இதனால் நாட்டின் அபிவிருத்திகள் பின்னடைவைச் சந்தித்திருந்தன. எவ்வாறிருப்பினும் இந்தப் பிரச்சினை இன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் எமது நாட்டின் அபிவிருத்திக்காகச் செயற்படுபவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே எனது அவா. நான் எனது துறையில் முன்னிலையில் உள்ளேன். இனி நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டுமென முடிவு செய்தேன். அதைத் தனித்திருந்து செய்ய முடியாது. அரசியல் மூலம் செய்ய முடியுமென நம்பினேன். நான் தேசியப் பட்டியல் உறுப்பினர் என்பதால் எனக்கென்று ஒரு தொகுதி கிடையாது. நான் எனக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியைக் கொண்டு நாட்டின் அனைத்து மக்களுக்கும் என்னால் முடிந்தவற்றைச் செய்வேன். எனக்குக் கிடைத்திருக்கும் சிறப்புரிமையைப் பயன்படுத்தி மக்களுக்காக ஏதாவது பயனுள்ளவற்றைச் செய்வதே எனது நோக்கம். அரசியலில் பணம் சம்பாதிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வின் அனுபவம் எப்படியிருந்தது?**

**பதில்:** பொதுவாக வெளியில் அரசியலைப் பற்றி எதிர்மறையான கருத்துகளே இருக்கின்றன என்றும் அரசியல் என்பது எவ்வளவு உயரியது. அதன் மூலம் எவ்வளவு சேவைகளைச் செய்ய முடியுமென்பதை பாராளுமன்றம் வந்ததன் பின்னர் தெரிந்துகொள்ள முடிந்தது. சமூகத்தின் முழுப் பிரச்சினைகளையும் இந்த சபைகள் தீர்த்துக்கொள்ள முடியும். அதுவொரு புனிதமான இடம். பாராளுமன்றத்தை பலரும் பயனுள்ளதாக பயன்படுத்திக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படும் அதேநேரம், ஒரு சிலர் அதைத் தவறாகப் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயம். எதையும் எதிர்மறையாகப் பார்க்காமல் சாதகமாக நோக்கினால் பாராளுமன்றத்தைப் போன்றதொரு உயரிய இடம்வேறில்லை.

**கேள்வி: புதிய எம்.பி. என்ற வகையில் தற்போதைய பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றி?**

**பதில்:** பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை சக்திமிக்க எதிர்க்கட்சியொன்று அவசியம். ஆனால், அது தற்போதைய பாராளுமன்றத்தில் இல்லை. அதுவே இன்று பெரிய குறைபாடாக இருக்கிறது. பாராளுமன்றத்தை ஒரு தரப்பு மட்டும் தனித்துக் கொண்டு நடத்த முடியாது. இருதரப்பு ஒத்துழைப்பும் கருத்துப் பரிமாற்றங்களும் அவசியம். அதுமட்டுமல்லாது, எதிர்க்கட்சி என்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து பணிகளுக்கும் எதிர்மறையாகச் சிந்தித்துச் செயற்படாமல் நியாயமான கருத்துகளை முன்வைத்து ஒத்துழைப்புடன் செயலாற்ற முன்வர வேண்டும்.

**கேள்வி: அரசியலில் உங்களது இலக்கு என்ன?**

**பதில்:** நான் ஏற்கனவே கூறியதுபோல் என்னால் மக்களுக்குச் செய்ய முடிந்த உச்சபட்ச சேவையைச் செய்வதே எனது இலக்கு.நான் அரசியலுக்குப் புதிது என்பதால் எதிர்காலத்தில் அதைச் செய்வேன். பாராளுமன்ற பிரவேசம் மூலம் நான் நிறையக் கற்றுக்கொண்டேன். அரசியல்,சட்டம்,வர்த்தகம்,நீதி பற்றி இன்னும் ஆழமாக கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**கேள்வி: அரசியல் தவிர்ந்த வேறு துறைகளில் ஆர்வம் இருக்கிறதா?**

**பதில்:** நான் எம்.பி. யாக இருந்தாலும் திரைப்படங்களில் நடித்து வருகிறேன். அதுமட்டுமல்லாது மாலினி பொன்சேகா மன்றமும் நடத்தி வருகிறேன். இதன் மூலம் பெண்கள்,குழந்தைகள்,பாரம்பரிய கலைகள் பற்றிய சேவைகளை மேற்கொண்டு வருகிறேன். அடுத்த மாதம் இந்த மன்றத்திற்கான பாராளுமன்ற அனுமதியும் கிடைக்கவுள்ளது.

**கேள்வி: மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** எதிர்க்கட்சியினர் மக்களிடையே நெருக்கடி,மோதல்,அமைதியின்மை போன்றவற்றை ஏற்படுத்த எடுக்கும் முயற்சிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். கிடைத்திருக்கும் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எதைச் செய்வதென்றாலும் எதிர்கால சந்ததியினர் குறித்து இரு தடவைகள் சிந்தித்துச் செயற்படல் வேண்டும்.

ஏ.டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா இரண்டாவது இடத்தில்



பூமி வெப்பமடைவது உட்பட காலநிலை மாற்றங்களால் அடுத்த 30 ஆண்டுகளில் அதிக பாதிப்பைச் சந்திக்கக்கூடிய நாடுகள் பட்டியலில் இந்தியா 2 ஆவது இடத்திலுள்ளது.


இங்கிலாந்தைச் சேர்ந்த ஆலோசனை நிறுவனம் மேப்பிள்கிராப்ட்.பூமி வெப்பமயமாவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய 171 நாடுகளின் பட்டியலை அது வெளியிட்டுள்ளது.

வறட்சி,புயல்,நிலச்சரிவுகள் போன்ற இயற்கைச் சீரழிவுகள் மற்றும் வறுமை, மக்கள் தொகை,உள்நாட்டு கலவரம்,வேளாண்மை சார்பு,எதையும் சந்திக்கும் திறன் ஆகியவற்றில் நாடுகளின் செயல்பாடு அடிப்படையில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தாழ்வான கடலோர பகுதிகள் அடிக்கடி புயல்,வெள்ள பாதிப்பு,வறுமை ஆகியவற்றின் அடிப்படையில் காலநிலை மாற்றத்தால் அதிக ஆபத்தைச் சந்திக்கும் நாடாக வங்கதேசம் உள்ளது. மக்கள் தொகை 110 கோடியைத் தாண்டியுள்ள இந்தியாவுக்கு 2 ஆவது இடம். மடகஸ்கார் 3 ஆவது இடமும் நேபாளம், மொசாம்பிக்,பிலிப்பைன்ஸ், ஹைதி, ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே,மியன்மார்,வியட்நாம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் 13 ஆவது இடத்திலுள்ளது.

பட்டியலில் கடைசி இடத்தில் நோர்வே இருக்கிறது. அங்கு பூமி வெப்பமய பாதிப்பு மிகக் குறைவாக இருக்கும். பின்லாந்து,ஐஸ்லாந்து,அயர்லாந்து, சுவீடன்,டென்மார்க் ஆகிய ஐரோப்பிய பணக்கார நாடுகளும் பட்டியலில் கடைசி இடங்களில் இடம்பிடித்துள்ளன.

# மனித மூளையை அட்டவணைப்படுத்தும் மகத்தான பணி மறுபடியும் ஆரம்பம்



100-500 பில்லியன் வரையிலான தொடர்புகள் கொண்ட பேரதிசயப் படைப்பாக மனித மூளை இருக்கிறது.

மனித மூளை எப்படிக்கட்டமைக்கப்பட்டுள்ளது அதன் அற்புதமான ஜாலங்கள் அறிவியில் உலகிற்கு என்றுமே மகத்தான சவாலாக இருந்து வருகிறது.கடந்த 2000 ஆம் ஆண்டு மனித மூளையின் வடிவமைப்பை தொட்டனர்.இப்போது பத்து பணிகளில் விஞ்ஞானிகள் முக்கிய இலக்கைத் தொட்டனர்.இப்போது பத்து ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் மறுபடியும் மனித மூளையை அட்டவணைப்படுத்தும் அதிநவீன பணிகள் ஆரம்பித்துள்ளன.

அமெரிக்கா,பிரிட்டன்,இங்கிலாந்து,ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள 33உயர் கல்வி நிறுவனங்கள் இந்த ஆய்வில் இறங்கியுள்ளன. இப்பணியை செம்மையாக செய்வதற்காக அமெரிக்க அரசு 30 மில்லியன் டொலர்களை முதற்கட்டமாக ஒதுக்கியுள்ளது.


இந்த வேலைத்திட்டத்திற்கு கொனக்ரோம் என்று பெயரிடப்பட்டுள்ளது.ஒரு மனித மூளையின் கொனக்ரோம் என்றும் இணைப்புப்பகுதி 100 ஆயிரம் கோடி துண் நரம்புகளால் இணைக்கப்பட்டுள்ளது. அந்த நரம்புகள் ஒவ்வொன்றும் சுமார் 7000 புள்ளிகளுடன் தொடுக்கப்பட்டுள்ளன.இவ்வாறு 100-500 பில்லியன் வரையிலான தொடர்புகள் கொண்ட பேரதிசயப் படைப்பாக மனித மூளை இருக்கிறது.

இத்தகைய அற்புத வடிவமைப்பான மூளையின் செயற்பாட்டு நுட்பங்களையும் இணைவுகளையும் அட்டவணைப்படுத்தினால் வரப்போகும் விஞ்ஞான உலகிற்கு அது பெரும் வரப்பிரசாதமாக அமையும். மூளைக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு பாரிய நோய்களுக்கான காரணங்கள்.அவற்றை சீர்செய்யும் நுட்பம் போன்ற நுண்பாக நரம்பியல் சம்பந்தப்பட்ட புரிய முடியாத பல நோய்களுக்கான காரணங்கள் புரிய வரும்.

இதேவேளை, மூளையின் உட்கட்டுமானங்களை அறியும் பொருட்டு டி.எஸ்.ஐ.என்னும் புதுவகை ஸ்கானரை உருவாக்கும் பணியில் ஹார்வாட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு ஈடுபட்டுள்து.இந்த டி.எஸ்.ஐ.ஸ்கானரும் எம்.ஆர்.ஐ.ஸ்கானரும் தகவல் பரிமாற்றத்தில் இணைந்து செயற்படவல்லவை. ஆகவே இரு தளங்களில் நடைபெறும் பணிகள் இறுதியில் சங்கமிக்கும் போது மூளை குறித்த அனைத்து பிரச்சினைகளுக்கும் அது விளக்கம் தரும்.மூளையின் மர்மங்களை விடுவிக்கும் பணி இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படை இலக்காக இருக்கிறது.சுமார் 3 மில்லியாட் தகவல்களை சேர்த்து வைத்தும் நவீன் சூப்பர் கணினியான மனிதமூளை பற்றிய தேடல் வரும் ஆண்டுகளில் உலகிற்கு மேலும் பல சுவையான தகவல்களைத் தர வழியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் யானை – மனிதர் மோதல்



எமது நாட்டில் விவசாயிகளுக்கும் காட்டு யானைகளுக்குமிடையிலான போராட்டம் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது.

இதன் காரணமாக விவசாயிகள் உயிரிழப்பதுடன் பெருமளவு அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

காட்டு யானைகள் விவசாயப் பயிர்களைச் சேதப்படுத்துவதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் வீடுகளையும் அழித்து வருகின்றன. விவசாயிகளும் சாதாரண கிராம மக்களுமே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பரிதாபமாக உயிரிழக்கின்றனர். காட்டு யானைகளிலிருந்து பாதுகாக்குமாறு கிராமத்து மக்கள் ஆர்ப்பாட்டங்கள், கவனயீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொண்டுள்ள போதும் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியேற்படவில்லை.

கடந்த வாரம் மாத்திரம் மட்டக்களப்பில் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு விவசாயிகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். இம்மாவட்டத்தின் புதுமண்டபத்தடி, வாகனேரி ஆகிய இடங்களில் விவசாயிகளும் வெல்லாவெளி பிரதேசத்தில் ஒரு வருடமாக மூவர் உயிரிழந்துள்ளனர். அதே வேளை, இவ்வருடம் அக்டோபர் மாதம் வரை 7 பேர் யானைத் தாக்குதலுக்கு பலியாகியுள்ளதாக வனவிலங்கு துறையின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையிலான மோதலுக்கான நிரந்தரத் தீர்வினை இவ்வருட இறுதிக்குள் கொண்டுவர வனவிலங்கு திணைக்களம் தீர்மானித்துள்ளது. யானைகளின் தாக்குதல்களினால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற பிரதேசங்களில் பதினொரு யானைகள் பரிபாலன அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டவும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு திணைக்களம் அறிவித்துள்ளது.

தமது உயிர்களைக் காப்பாற்றுவதற்காக விவசாயிகளுக்கு யானை வெடிகள் தட்டுப்பாடின்றி வழங்கவும் செயலிழந்துள்ள மின்வேலிகளைப் புனரமைக்கவும் வனவிலங்குத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

யானைகளின் அத்துமீறல் செயற்பாட்டினால் பெருமளவு கிராமப்புற மக்களே பாதிக்கப்படுகின்றனர். அதிலும் கூடுதலாக வடமேல், ஊவா, கிழக்கு, வட மத்திய, மத்திய மாகாணங்களே பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், வடமேல் மாகாணத்தில் இவ்வருடத்தின் கடந்த ஒன்பது மாதங்களில் வனவிலங்கு பாதுகாப்பு வலயத்தில் 37 காட்டு யானைகள் கொல்லப்பட்டுள்ளதுடன், யானைகள் தாக்கி 25 பேர் பலியாகியுள்ளதாக வனவிலங்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் யூ.எல்.தௌபீக் தெரிவித்தார்.

காட்டு யானைகளின் தாக்குதல் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

புத்தளம் மாவட்டத்தில் 5 காட்டு யானைகளும் குருநாகலில் மூன்றும் அநுராதபுரத்தில் 26 உம் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மூன்று யானைகளும் கொல்லப்பட்டுள்ளதுடன், புத்தளத்தில் இருவரும் குருநாகலில் 14 பேரும் அநுராதபுரத்தில் ஒன்பது பேரும் பலியாகியுள்ளனர்.

காட்டு யானை[illegible] 25 பேர் பலியாகியுள்ளதுடன், 37 காட்டு யானைகளும் துப்பாக்கிச் சூடு, கட்டுத்துவக்கு, மின்சாரவேலி, ரயிலில் மோதுதல் போன்ற காரணங்களினால் இறந்துள்ளன.

மேலும், வடமேல் வனவிலங்கு வலயத்தில் பொதுமக்களையும் விவசாய நிலங்களையும் யானையின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க இதுவரை சுமார் 400 மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இவ்வேலிகளைப் பராமரிக்கும் பொறுப்பு பிரதேச மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ரஜ்நாயக்க, நிக்கவரெட்டிய போன்ற பிரதேசங்களில் மக்களுக்கு அச்சுறுத்தலாக உலாவி வந்த 60 காட்டு யானைகள் தப்போவ [illegible] விரட்டப்பட்டுள்ள போதும் தொடர்ந்தும் பழைய இடங்களுக்கு வர ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

யானைகளுக்கென வாழ்வதற்கு வழங்கப்பட்டுள்ள பெரும் காடுகளை உயிரினங்களின் வாழ்விடங்களை மனிதன் சூறையாடுவதினாலேயே இந்நிலைமை ஏற்படுகிறது எனவும் கூற முடியும். உயிரினங்களில் சுதந்திரமாக வாழ்வதற்கான காடுகள் வேகமாக அழிக்கப்படுவதை நிறுத்துவதன் மூலமும் வனவிலங்குகளுக்குரிய பாதுகாப்பு வழங்கப்படுவதன் மூலமும் உயிரிழப்புகளை நிவர்த்திக்க முடியும்.

மனிதர்களைப் போன்றே ஏனைய உயிரினங்களும் நாட்டின் அரிய சொத்துகளாகும்.

உலகில் அருகிச் செல்லும் உயிரினங்களைப் பாதுகாக்க அவசியம் குறித்து சர்வதேச ரீதியில் குரலெழுப்பப்பட்டு வரும் வேளையில், நாமும் அவ்வேண்டுகோளுக்கு செவிசாய்க்க வேண்டும்.

இலங்கையில் உயிரினங்களைப் பொறுத்தவரை சிறுத்தை, கரடி, காட்டுக்கோழி, யானை போன்றவை அழிவடையும் பட்டியலில் உள்ளதாக யானைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளும் நிபுணரொருவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் சுமார் 50 பேர் காட்டு யானைகளால் தாக்கப்பட்டு பலியாவதோடு, 100 இற்கும் அதிகமான யானைகள் விவசாயிகளால் தாக்கப்பட்டு பலியாகின்றன. விவசாயி காட்டு யானைகளுக்கிடையிலான இப்போராட்டத்திற்கு *(The Elephant Transit Home, Srilankan Wildlife Conservation Society)* யும் வன விலங்குகளின் பாதுகாப்புக்கு உதவுகின்றன. இதேவேளை, இவ்விலங்குகள் மூலம் மனிதர்களுக்கு ஆபத்துகள் ஏற்படாமலிருப்பதற்கு மின்சார வேலிகளை அமைப்பதற்கும் இவ்விரு நிறுவனங்களும் உதவிபுரிகின்றன.

இலங்கையிலுள்ள சரணாலயங்களில் தற்போது 4500 யானைகள் காணப்படுகிறது. நாட்டின் வளங்களில் வனவிலங்குகளும் முக்கியமானவையாகும்.

எனவே, வனவிலங்குகளை உரிய முறையில் வசதிகளை ஏற்படுத்த அரச நடவடிக்கையெடுக்க வேண்டும். அதே வேளை, விவசாயிகளின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் காட்டு யானையிலிருந்து பாதுகாப்பு வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமிடத்தே மனித உயிர்கள் பலியாகும் எண்ணிக்கையை இல்லாதொழிக்க முடியும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காது கேட்காவிட்டால்...

காது கேட்காது போகின்ற போது ஒருவர் படுகின்ற அவஸ்தை சொல்லித்தானா தெரிய வேண்டும் என்றில்லை. அவர் மட்டும் தான் அவஸ்தைபடுகின்றார் என்றால் அதுவும் இல்லை. அவரைச் சுற்றியுள்ளவர்களும் அவஸ்தைக்குள்ளாகின்றனர்.



பொதுவாக வயது வந்தவர்களில் காது கேட்கவில்லை என்றால் அவர்கள் மிகவும் உரத்துக் கதைப்பார்கள். மற்றும் ஒதுங்கிப் போய்விடுவார்கள். இல்லாதவிடத்து சந்தேகம் ஏற்படும் நிகழ்வுகளும் உண்டு. எமது சமூகத்தில் பாடசாலைச் சிறுவர் தொடக்கம் அலுவலகம் செல்வோர் வரை தமது காதுகளை இயர்பட் பாவனையினால் அதாவது செவிப்பறை மென்சவ்வை துளையிட்டுக் கொண்டவர்கள் தான் அதிகம். இவர்கள் தமது வேலையில் சிறப்பாகச் செயற்பட முடியாமல் போவதும் பழகும் விதத்தில் ஆரோக்கியமற்று அதாவது சீறிச்சினந்து சண்டையிட்டுக் கொள்வதும் இவர்களைத் திறமை இருந்தும் திறமையற்றவர்களாக்கப்படும் கொடுமை இங்கு தான் நிகழ்கின்றது. இக்காது கேளாத்தன்மை சில சமயங்களில் தற்காலிகமாகவும் சிலவேளைகளில் நிரந்தரமாகவும் ஏற்படலாம்.



தற்காலிகமாகக் காது கேட்காத் தன்மை ஏற்பட காதில் காணப்படும் செவிப்பறை மென்சவ்வுப் பகுதியில் மெழுகுபடை அதிகரித்தல் காரணமாகலாம். இது பொதுவாக இயர்பட் பாவிக்கும் போது காதுக்கால்வாயில் சுற்றயல் பருதிவழியாகக் காணப்படும் மெழுகு உள்நோக்கித்தள்ளப்பட்டு செறிவடைந்து திண்மமாகின்றது. இவற்றை விட காதில் சீழ் வழிதல் அல்லது நீர் வழிதல் இவை செவிப்பறை மென்சவ்வு கிழிவுற்றதன் விளைவாகவே ஏற்படுகின்றது.

மேலும் சளிக்காய்ச்சல் ஒவ்வாமை மற்றும் சில வகை மருந்துகளான ஜென்றாமைசின் போன்ற மருந்துகளினாலும் ஏற்படுகின்றது. இன்னும் பிறப்புக்குறைபாட்டாலும் குழந்தை கருவில் உருவாகும் போது உட்புறக்காது சரியாக வளர்ச்சியடையாது இருப்பதால் ருபெல்லா இன்புழுவன்சா போன்ற நோய்க்கிருமிகளின் தாக்கத்தினாலும் காதின் கேட்டல் திறன் குன்றுகின்றது.



மதுபானம் குயினைனின் மாத்திரைகள் இவையும் தாம் சலித்தவை அல்ல என்றே நகருகின்றன. சத்தம் அல்லது வெடிச்சத்தம் அல்லது விபத்துகளின் போது உட்செவி பாதிப்புறுதல் மண்டையோடு பாதிப்புறும் போது காற்று அழுத்தம் காரணமாகவும் மற்றும் நோயியல் ரீதியாக மூளைக்காய்ச்சல் சின்னம்மை, மஞ்சள்காமாலை போன்ற நோய்க்கிருமிகளின் செயற்பாட்டின் காரணமாகவும் ஏற்படுகின்றன.

பொதுவாக வயதானவர்களில் நரம்புச் செவிடு, என்புச் செவிடு என்பன ஏற்படுகின்றது. இவற்றில் நடுச்செவி என்புகள் இறுக்கமடைவதால் அசைவு குன்றி என்புச்செவிடு ஏற்படுகின்றது. இது செவிப்புலன் கருவியினூடாகச் சீர்செய்யக் கூடியது எனினும் நரம்புச் செவிட்டை கருவியூடாக சீர்செய்வதென்பது மிகக்கடினம்.

இதைவிட கருவியைப் பயன்படுத்தும் போது சன நெருக்கம் கூடிய புறச்சத்தம் மிக்க இடங்களில் கையாள்வதும் மிகவும் கடினம். இவ்வாறு காது கேட்காமல் ஏற்படும் அவஸ்தைகளோ சொல்லிலடங்கா மனித வாழ்வின் பூரணத் தன்மையைச் சிதைத்து சிந்தனைத்திறனைக் குறைத்து உறைந்த உணர்வுடன் உலாவச் செய்கின்றது.

இவற்றுடன் வேலைத்திறனின்மை மற்றோருடன் பேசமுடியாமை இவற்றால் விரக்தி ஒதுங்குதல் சந்தேகம் இவை யாவும் ஏற்படுகின்றன. இதனூடு நோக்கும் போது அரிது அரிது அதிலும் அரிது காதுகேளாமை என்னும் குறைபாடின்மை. எனவே நல்ல நிலையில் உள்ள காதுகளைக் கூட காது துடைக்க எண்ணி கேடு விளைப்பதை எண்ணும் போது கவலைகொள்ள வேண்டியே வரும்.

டாக்டர்
வெ.நாகநாதன்
சிவாஜி மருத்துவ
ஆலோசனை மையம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்களின் நிஜ அர்த்தம்

நாம் பேச்சு மொழியில் பல ஆங்கில வார்த்தைகளை எளிதாகப் பயன்படுத்துகின்றோம். ஆனால், அதன் விரிவாக்கம் என்ன என்பதை அறிந்திருப்பது




மிகச் சிலரே. நாம் பயன்படுத்தும் சுருக்கமான வார்த்தையின் விரிவாக்கம் என்ன என்பதைப் பார்ப்போம்.

இது 3 அடி (முப்பரிமாணம்) படம் என்போம். அது என்னவென்றால் 3 டைமன்சன் என்பதன் சுருக்கமாகும்.

காலை நேரத்தை ஏ.எம். என்றும் இரவு நேரத்தை பி.எம்.என்றும் கூறுவோம். ஏ.எம்.என்றால் அண்டி மெரிடியம் என்றும் பி.எம்.என்றால் போஸ்ட் மெரிடியம் என்பதும் விரிவாக்கமாகும்.

கணினியைப் பயன்படுத்தும் அனைவரும் அறிந்த ஒரு விடயம் ஈ-மெயில் மூலம் ஈ-மெயில் மின்னஞ்சல் முகவரி உள்ள எவருக்கும் நாம் கடிதம் அனுப்பலாம்.இதில் ஈ-மெயில் என்பது எலக்ட்ரோனிக் மெயில் என்பதன் சுருக்கமாகும்.

அதேபோல நீங்கள் மின்னஞ்சல் அனுப்பும்போது மின்னஞ்சல் அனுப்பப்பட வேண்டியவரின் மின்னஞ்சல்முகவரியை டூ என்ற இடத்திலும் சிலரது முகவரியை சிசி என்ற இடத்திலும் ஒரு சிலரை பி.சி.சி. என்ற இடத்திலும் போடுகிறோம்.

சிசி என்றால் என்ன? பி.சி.சி.என்றால் என்ன? என்பது பற்றிப் பார்க்கலாம். சிசி என்றால் கார்பன் கோப்பி என்று பொருள். இந்த முகவரியில் சேர்க்கப்படுபவர்களுக்கும் நாம் இன்னாருக்கு மின்னஞ்சல் அனுப்புகிறோம் என்பதைத் தெரிவிக்கும் வகையில் சேர்க்கப்படுவதாகும்.

பி.சி.சி. என்றால் பிளைண்ட் கார்பன் கோப்பி என்று பொருள். பி.சி.சி.யில் சேர்க்கப்படும் முகவரி மற்றவருக்குத் தெரியாது.

வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் பலரும் பயன்படுத்தும் வார்த்தை ஏ.டி.எம். கார்ட் என்பதாகும். ஏ.டி.எம். என்றால் ஓட்டோமேட்டட் டெல்லர் மெஷின் என்பதாகும்.

செல்பேசியில் நாம் நண்பர்களுக்கு அனுப்பும் குறுந்தகவலான எஸ்.எம்.எஸ். என்பதற்கு ஷோர்ட் மெசேஜ் சேர்வீஸ் என்பதுதான் விரிவாக்கமாகும்.

நாம் வாய்க்கு வாய் சொல்லும் ஓ.கே. என்பதன் விரிவாக்கம்,ஓல் கரைக்ட் என்பதாகும்.



# இன்னொரு பூமி...?

இன்றுவரை 230 அயல்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டிருக்கின்றன.இதில் ஜெப்ரி மார்சி என்பவர் தலைமையிலான அமெரிக்க ஆராய்ச்சிக் குழு மட்டும் 150 கிரகங்களைக் கண்டுபிடித்திருக்கிறது.நமது பால் வீதியில் மட்டும் 10 ஆயிரம் கோடி கிரகங்கள் இருக்கலாம் என்று ஜெப்ரி மார்சி தெரிவித்திருக்கிறார்.இதில் வியாழன் போன்ற வாயுக்கோள் கிரகங்கள் 600 கோடி இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.பூமியைப் போன்று 10 இலட்சம் கிரகங்கள் இருக்கலாம் என்று டெப்ராபிசர் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

தற்போது 5 கிரகங்களில் பூமியைப் போன்று தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.50 கிரகங்களில் உயிரினம் இருக்க வாய்ப்பிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.மெக்சிகோ அருகே விழுந்த ஒரு விண்கல்லில் சீனிப் படிவு காணப்பட்டிருப்பதால் உயிரினம் உள்ள அயல் கிரகம் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அயல்கிரகங்களில் மனிதர்களைப் போன்ற அறிவு மிக்க உயிரினங்கள் இருக்கின்றனவா? என்று கண்டுபிடிப்பதற்கான திட்டத்தை அமெரிக்கா செயல்படுத்தி வருகிறது.நமது பூமியின் கடலின் அடியில் உள்ள எரிமலைகளிலும் வடதுருவப் பனிப் பிரதேசத்திலும் வறண்ட பாலைவனங்களிலும் நுண்ணுயிரிகள் இருப்பது போல விண்வெளியில் உள்ள அயல் கிரகங்களிலும் உயிரினங்கள் ஏற்கனவே தோன்றி வாழ்ந்து கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக டெப்ராபிசர் தெரிவித்துள்ளார்.பூமிக்கு அருகில் உள்ள அயல்கிரகங்களில் உயிரினங்கள் இருந்தால் அதை 10 வருடங்களுக்குள் கண்டுபிடித்துவிடலாம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

பூமியில் இருந்து 44 ஒளிவருட தூரத்தில் உள்ள 'உர்சா மேஜர்' என்ற நட்சத்திரத்தை ஒரு கிரகமானது,சூரியனை பூமி சுற்றிவரும் தூரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது.அக்கிரகத்தில் தண்ணீரும் உயிரினங்களும் காணப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.இரவில் நான் கோடிக்கணக்கான நட்சத்திரங்களைப் பார்க்கும்போது அவற்றில் உயிரினங்கள் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது என்கிறார் டெப்ரா பிசர்.

# வறுமை போக்கும் செல்போன்



உலக நாடுகளில் செல்போன் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 500 கோடியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது விரைவில் ஒவ்வொருவரிடமும் ஒரு செல்போன் இருக்கும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது.தற்போது வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் 100 பேருக்கு 58 பேரிடமும் [illegible] செல்போன் இருக்கிறது.

செல்போன் உபயோகத்தால் உலக நாடுகளில் வறுமை குறைந்து வருகிறது என்று ஐ.நா.சபை ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.செல்போன் வைத்திருப்பவர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை செல்போன் மூலமே எளிதாக பெற்று விடுகின்றனர்.

இதனால் அவர்கள் குறிப்பிட்ட இடத்துக்குப் பணம் செலவு செய்து செல்லத் தேவையில்லை.வீண் அலைச்சல் குறைகிறது.

இது போன்ற காரணங்களால் மக்களுக்கு பல வழிகளில் செலவுகள் குறைகின்றன. எனவே வறுமை நிலையும் குறைகிறது என்று ஐ.நா.அறிக்கை கூறுகிறது.

செல்போன் மூலமும் ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

# காணாமல்போன 'பேர்ஸ்'

தற்போது தென்பகுதிக்கும் குடாநாட்டுக்குமான ஏ- 9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டு தினமும் ஆயிரக்கணக்கான பயணிகளும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் சென்று வருகின்றன.யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டபடியால் படையினரின் சோதனைச் சாவடிகளும் சோதனைகளும் குறைவடைந்து பயணிகள் பெரியளவிலான சிரமங்களின்றி சென்றுவரக்கூடிய நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

ஆனால் இவ்வாறான நிலையிலும் சில பண்பாடற்றவர்களின் செயற்பாடுகளினால் பயணிகள் அவதிப்படும், அவமானப்படும் சம்பவங்களும் இடையிடையே நடந்தேறி விடுகின்றன.இவ்வாறான ஒரு சம்பவத்தினால் பயணிகள் பட்ட அவஸ்தையையும் அவர்களின் பயணம் பல மணி நேரம் தாமதிக்கப்பட்ட நிலையையும் இந்த அக்கம் பக்கத்தினூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

குடாநாட்டிலிருந்து தென்பகுதி நோக்கிவந்த பயணிகள் பஸ்ஸொன்று குறிப்பிட்ட ஒரு சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டது.பஸ்ஸிற்குள் அதிகளவிலான பயணிகள் இல்லை.இருந்தவர்களும் மிகவும் பண்பாடானவர்களாகவே காணப்பட்டனர்.அதில் ஒரு இளம் குடும்பம் இருந்தது.கணவன்,மனைவியுடன் இரு பெண்பிள்ளைகள்.பெண்பிள்ளைகளுக்கு 14,12 வயது இருக்குமென நினைக்கிறேன்.

இந்தக் குடும்பம் மிகவும் வசதியான ஒரு குடும்பமாகவே காணப்பட்டது.கணவன்,மனைவி இருவரும் மிகவும் படித்தவர்கள் போல் இருந்தனர்.பயணிகள் சோதனைக்காக அனைவரும் இறங்கிச் சென்றனர்.பயணிகள் சோதனை ஒருபுறம் நடக்க சில படையினர் பஸ்ஸிற்குள் ஏறி சோதனையிட்டனர்.பின்னர் அனைவரையும் பஸ்ஸில் ஏறி பயணத்தை தொடர படையினர் அனுமதித்தனர்.

பஸ்ஸிற்குள் ஏறி அனைவரும் தமது இருக்கைகளில் அமர்ந்தபோது அந்த குடும்பம் மட்டும் அதிர்ச்சியடைந்த முகத்துடன் தமது பேக்குகளை துருவித்துருவி தேடிக் கொண்டிருந்தனர்.சில பயணிகள் இதனை அவதானித்துவிட்டு என்னவென்று கேட்டபோது பேக்குக்குள் பணத்துடன் வைத்திருந்த பேர்ஸை காணவில்லையென அவர்கள் கூறினர்.இதையடுத்து பஸ்ஸிற்குள் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

எவ்வளவு பணம் இருந்தது?நகை இருந்ததா?கிரடிட் காட்,அடையாள அட்டை,பாஸ்போர்ட் இருந்ததாவென ஒவ்வொரு பயணியும் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் போல விசாரிக்கத் தொடங்கினர்.அந்தப் பெண் அழுகையுடனேயே தனது சகல பேக்குகளைத் தேடிய போதும் பேர்ஸ் கிடைக்கவில்லை.சோதனையிடுவதற்காக பேக்கை கொண்டு சென்றதாகவும் பேக்கை சோதனையிட கொடுத்துவிட்டு உடற்சோதனை முடித்து வெளியே வந்து பேக்கை எடுத்து வந்து திறந்த போது பேர்ஸ் இல்லையென்றும் அந்தப்பெண் கூறினார்.

பஸ் புறப்படாமல் நெடுநேரம் நிற்பதை அவதானித்த படையினர் சிலர் பஸ்ஸுக்குள் ஏறி என்ன விடயம் என கேட்டனர்.உடனே சில பயணிகள் விடயத்தை அவர்களுக்கு சிங்களத்தில் கூறினர்.ஆனால் பயணிகளில் ஒருவர் இவங்கள்தான் எடுத்திருப்பாங்கள் இப்ப வந்து என்ன நடக்குது என்று புதினம் கேட்கிறாங்கள் திருட்டு...என்று கெட்ட வசனத்தில் திட்டினார். இதையடுத்துத்தான் வினை ஆரம்பமானது.

'ஐயா நீங்கள் சொன்னதை திருப்பிச் சொல்லுங்கோ' என்று படைவீரர் ஒருவர் தூய தமிழில் கேட்கவே பயணிகள் எல்லோருக்கும் தூக்கி வாரிப்போட்டது.அந்தப் படைவீரர் தொடர்ந்து 'எங்களை நீங்கள் குற்றம் சாட்டுகின்றபடியால் காணாமல்போன பேர்ஸை கண்டுபிடிக்கும்வரை பஸ்ஸை எடுக்கக் கூடாது' என்று கூறிவிட்டு இருபடையினரை பஸ்ஸிற்குள் நிறுத்திவிட்டு வேகமாக இறங்கிச் சென்றார்.

பின்னர் அந்தப்படைவீரர் தனது உயரதிகாரிகள் சிலருடன் பஸ்ஸிற்குள் வந்து ஏறினார். அந்த உயரதிகாரிகள் சிங்களத்தில் கூறி இவர் தமிழில் மொழி பெயர்த்தார். பேர்ஸை யார் எடுத்திருந்தாலும் உடனடியாக கொடுத்துவிடுங்கள்.எந்தத் தண்டனையும் உங்களுக்கு கிடையாது. ஆனால், நாங்கள் கண்டுபிடித்தால் ஜெயிலுக்குத்தான் போவீர்கள். உங்களுக்கு 15 நிமிடம் நேரம் தருகிறோம் என்று அந்தப்படை வீரர் கூறினார்.

உடனே எம்மவர்கள் ஏய் யாராவது எடுத்திருந்தால் கொடுத்திடுங்கோ இல்லாட்டி எல்லோருக்கும் கஷ்டம் என்று கூறி ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் திருடர்கள் போல் பார்க்கத் தொடங்கினர், படை அதிகாரிகள் கொடுத்த 15 நிமிடமும் ஓடிமுடிந்தது. ஆனால், பயணிகள் வாய் திறக்கவும் இல்லை. பேர்ஸ் கிடைக்கவும் இல்லை. எனவே அனைவரையும் பேக்குகளையும் தூக்கிக்கொண்டு கீழே இறங்குமாறு படையினர் உத்தரவிட்டனர்.

பேர்ஸை தொலைத்த கணவன், மனைவியை அழைத்த படையினர் அவர்கள் முன்பாகவே ஒவ்வொரு பயணிகளையும் துருவித்துருவி சோதனையிட்டனர். அவர்களின் உள்ளாடைகளுக்குள் கூட சோதனை நடத்தப்பட்டது. ஒவ்வொரு பயணியின் பேர்ஸும் அந்தத் தம்பதிக்கு காட்டப்பட்டது. பேக்குகள் அக்கு வேறு ஆணி வேறாக சோதனையிடப்பட்டன. சிலரை படையினர் மிரட்டியும் பார்த்தனர். ஆனால், பேர்ஸ் கிடைக்கவில்லை.

இதையடுத்து பயணிகள் அனைவரையும் ஓரிடத்தில் நிறுத்திய படையினர் பஸ்ஸிற்குள் சல்லடை போட்டுத்தேடினர்.அப்போது பஸ்ஸிற்குள் பேர்ஸ் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பயணிகளுக்கு ஒருபுறம் மகிழ்ச்சி நிம்மதி மறுபுறம் எம் ஒவ்வொருவரையும் இப்படி அவமானப்படுத்திவிட்டனரே என படையினர் மீதும் அந்தக் குடும்பம் மீதும் ஆத்திரம்.

பேர்ஸை தொலைத்த அந்தக் குடும்பத்தை கண்டித்த படையினர் பஸ் பயணத்தை தொடர அனுமதித்தனர். பஸ்ஸிற்குள் ஏறிய ஒவ்வொரு பயணியும் அந்தக் குடும்பத்தை வாய்க்கு வந்தபடி திட்டத்தொடங்கினர். அந்தப்பெண் கையெடுத்துக் கும்பிட்டவாறு அழுதுகொண்டிருந்ததைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஆனால், அதனை எவரும் கணக்கெடுக்கவில்லை.

பேர்ஸ் பஸ்ஸிற்குள் விழுந்து கிடந்ததை நீங்கள் எல்லோரும் தேடும் போது கண்டீர்களா? எனக்கு நல்ல ஞாபகம். நான் சோதனைக்காக பேக்கைக்கொண்டு போனபோது பேர்ஸ் அதற்குள் இருந்தது. திரும்பி வந்து பார்க்கும்போது இல்லை. இப்போது பஸ்ஸிற்குள் கிடக்குது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எங்களால் உங்களுக்கு ஏற்பட்ட அவமானத்துக்காக எங்களை மன்னித்துக்கொள்ளுங்கோ என்று கூறி அந்தப்பெண் அழுதார்.

அதன் பின்னர் சற்று யோசித்த பயணிகள் ஏதோ புரிந்துகொண்டவர்கள் அமைதியடைந்ததுடன் அந்தப்பெண்ணையும் தேற்றினர். உவங்கள்தான் எடுத்துப்போட்டு விடயம் பெரிசாகிவிட்டதால் தந்திரமாக விளையாட்டுக்காட்டிட்டாங்கள் என்று முதல்கேட்ட அதே குரல் மீண்டும் கேட்டது. ஆனால், அந்த பேர்ஸ் எப்படி காணாமல்போனது, மீண்டும் எப்படி அந்த இடத்தில் கிடந்தது என்பது இறுதி வரை தெரியவில்லை.

எனவே இவ்வாறான பயணங்களின் போது நாம் முன்னெச்சரிக்கையுடனிருந்தால் எமக்கு ஏற்படும் பிரச்சினைகளை மட்டுமன்றி எம்மால் மற்றவர்களுக்கு ஏற்படும் அவதி, அவமானங்களையும் தவிர்க்கமுடியும்.

**கி.ஜஷிகேஷ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவளைச் சொல்லிக் குற்றமில்லை

தெள்ளாறு ந.பானு

யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த நோக்குடன் வாழ்வது தமிழர் மரபு. ஆனால்,மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்த ஒரு தலைவன். தான் பெற்ற துன்பம் வேறு எவரும் பெறக்கூடாது என்ற எண்ணத்தில் கற்போர் மனதில் நிற்கும் வண்ணம் தன் கருத்தை வெளியிடும் பாங்கமைந்த பாடல் ஒன்றைப் பாடியுள்ளான். இத்தலைவன் நரபதி என்று எல்லோராலும் போற்றப்படும் நந்திவர்மனுக்குரிய மயிலாப்பூரில் வாழ்ந்து வருகிறான். ஒருநாள் வீதியில் வந்து கொண்டிருக்கிறான்.எதிரே பேரழகி ஒருத்தி வரக் காண்கிறான். வள்ளுவர் காட்டும் தலைவன் வர்ணிப்பதுபோல.

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல் உண்கண் வேய்தோள் அவட்கு

அதாவது அவள் மேனி மாந்தளிர் போன்றது.பற்கள் முத்துகள் போன்றவை அவள் மேனியில் இயல்பாகவே வாடைமிக்க வாசனையுள்ளது. மை தீட்டிய கண்கள் நஞ்சூட்டிய வேல்கள் போன்றவை. தோல்கள் பளபளப்பிலும் மினுமினுப்பிலும் மூங்கிலைப் போன்றவை என்று சொல்லத்தக்க வகையில் அவள் வருகிறாள்.

அவளது பேரழகை இவன் உற்று நோக்குகிறான்.பிற மங்கையர் அழகெல்லாம் தோற்கடிக்கின்ற அழகுள்ளவளாக இவள் இருப்பதால் வியப்பின் எல்லைக்கே செல்கிறான்.

கருமணல்போல விளங்கும் கூந்தல் அழகும் இளமை பொருந்திய மானைப் போன்ற பார்வையுடைய கண்களும் அவனை நிலைகொள்ளச் செய்தன.உறுப்புகளில் ஏனைய எல்லாஉறுப்புகளிலும் தலைசிறந்தது கண். கண் இல்லையென்றால் ஒருவனுக்கு காட்சி இன்பம் கிடைக்காது. கண்ணே காதலர்க்கு முதற்கண்கூடுவதற்கு உதவும் சிறந்த கருவி.

ஆக, இத்தலைவியின் கண்களைப் பூத்துநிற்கும் குவளை மலர் பார்த்தால் இவளுடைய கண்களுக்கு இணையாக நம்மால் இருக்க முடியவில்லையே என்று வெட்கப்பட்டு தலையைக் குனிந்துகொண்டு நிலத்தைப் பார்க்கும் என்ற எண்ணம் இவனுக்குத் தோன்றுகிறது.

அவளைப் பார்த்த பின்பு வேறு எதையும் காண முடியாமல் நின்ற தலைவனுக்கு திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஓரளவு மனக்கட்டுப்பாட்டுடன் இருக்கும் எனக்கே இவள் அழகு திக்குமுக்காடச் செய்கிறதே... அறிவு திருந்தாத இளமைமிக்க பிற ஆடவர்கள் இவளைக் காண நேர்ந்தால் தன் மனதை மீட்க இயலாது. அதே எண்ணமாய் வேறு செயல்களில் கருத்தில்லாது வருந்தி நொந்துபோவார்களே!

இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இந்நிலைக்கு யாரைக் குற்றம் சொல்வது.இயற்கை அழகுடன் இவள் பிறந்துவிட்டாள். இது இவள் செய்த குற்றமல்ல. இவள் அன்னையார் இவளை வீட்டிலே அடைத்து வைக்காமல் வெளியே வந்து உலவுமாறு அனுப்பிவிட்டார்களே.என்னகொடுமை இது! இவருக்குத்தான் விபரம் தெரியவில்லையென்றால் இவளைப் பெற்ற தந்தைக்கும் உடன்பிறந்த தமையன்மார்களுக்குமா தெரியவில்லை? அவர்களாவது இவளை வீட்டிலே பாதுகாக்கக் கூடாதா?

இந்நாட்டு மன்னன் நந்திவர்மன் கோல்முறைக் கோடா கொற்றவன். அவனுடைய நாட்டிலா இக்கொடுமை நிகழ்வது. ஒருவேளை இவளைப் பெற்ற அன்னையர்க்கு இவ்வுலகில் வாழும் எம்போன்ற இளமை பொருந்திய ஆடவரிடத்து காரணமில்லாத பகை ஏதேனும் உண்டோ? அதனால் தான் ஆடவர் உயிரை அழித்தொழிப்பது என்ற எண்ணத்துடன் அழகுக்கு அழகு செய்து இவளை வீதியிலே உலவ விட்டார்களோ...? என்று இத்தலைவன் எண்ணிப்பாடும் நந்திக்கலம்பகப் பாடல் இதுதான்.

**அரிபயில் நெடுநாட்டடத் தஞ்சனம் முழுதூட்டிப்**
**புரிகுழல் மடமானைப் போதர விட்டாரால்**
**நரபதி எனும் நந்தி நன்மயிலாபுரியில்**
**உருவுடை இவள்**
**தாயர்க் குலகொடு**
**பகை உண்டோ?**
**(பா-73)**

இலக்கிய சுவை...

---

# நீயும் ஒன்று இனியை; அவரும் ஒன்று இனியர்!

ம.புவனேஸ்வரி

சங்க காலத்தில் புலவர்களுக்கும் அரசர்களுக்கும் இடையிலான தொடர்பு வெறும் புலவனுக்கும் அரசனுக்கும் உள்ள தொடர்பாக மட்டும் அமைந்திருக்கவில்லை. புலவர்கள், அரசர்களின் உயிருக்குயிரான நண்பர்களாகவும் அரசியல் ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

மக்களிடமிருந்து திரைப்பொருளை நல்வழியில் பெறச் செய்வது, அதன் மூலம் நாட்டில் நல்லாட்சி நிலவச் செய்வது, அரசன் செங்கோன்மையிலிருந்து பிறழுங்காலத்து இடித்து அறிவுரை கூறுவது, பழி பாவங்கள் ஏற்பட்டால் அரசனைக் காப்பது முதலிய அருஞ்செயல்களிலும் புலவர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்தகைய புலவர்கள்,அரசர்கள்,வீரம் முதலிய பண்புகளில் சிறந்து விளங்கிய காலத்து அவர்களைப் புகழ்ந்துரைக்கவும் தவறியதில்லை. அங்ஙனம் வெளிப்படையாகப் புகழ்வதோடு. குறிப்பாகப் புலப்படுமாறு புகழாப் புகழ்ச்சியாகவும் அமைத்துப் பாடத் தவறியதுமில்லை.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்னும் புலவர் ஒருவர், ஏனாதி திருக்கிள்ளி என்னும் மன்னனைப் புகழ்ந்துள்ளமையைக் காணலாம். ஏனாதி திருக்கிள்ளி,போரைக் கண்டுவிட்டால் உடன் அப்போரை வென்று பகைவர் படையை விலக்கி எதிர்த்து நிற்பானதலால் அவனது உடல் முழுவதும் வாளால் ஏற்பட்ட விழுப்புண்கள் நிறைந்துள்ளன. எனவே, அவனது உடலோ காண்பதற்கு இனியதல்ல. அவனது பகைவர்கள் அவனைக் கண்டளவிலேயே புறங்காட்டி ஓடிவிடுகின்றனர். ஆதலால், அவர்கள் ஊறு அறியாத அழகிய யாக்கையோடு காட்சிக்கு இனியராக (அழகானவராக) உள்ளனர். புறங்கொடுத்த கீழ்மையால் அவர்கள் கேள்விக்கு இனியரல்லர். புலவர் இவ்வாறு உரைத்துவிட்டு அடுத்ததாக ஏனாதி திருக்கிள்ளியிடம் தம் ஐயத்தை எழுப்புகிறார்.

நீயும் ஒன்றில் இனியவன்,நின் பகைவரும் ஒன்றில் இனியவர்,அவரோடு ஒவ்வாதன வேறு எவை உள்ளன. ஆனால், உன்னை மட்டும் இவ்வுலகம் வியந்து போற்றுகிறதே. அதன் காரணம் யாதென்று எமக்கு உரைப்பாயாக என்று நயம்பட வினவுவதாக அப்பாடலை வாகைத் திணையில் அரசவாகைத் துறையில் அமைந்துள்ளது.

**'நீயே அமர்காணின்**
**அமர் கடந்து அவர்**
**படை விலக்கி எதிர் நிற்றலின்**
**வாஅள் வாய்த்த வடு**
**வாழ் யாக்கையொடு**
**கேள்விக்கு இனியவை**
**கட்கின் னாயே!**
**அவரே,நிற்காணின்**
**புறங்கொடுத்தலின்**
**ஊறு அறியா மெய் யாக்கையொடு**
**கண்ணுக்கு இனியர்;**
**செவிக்கு இன்னாரே**
**அதனால் நீயும் ஒன்று இனியை அவரும் ஒன்றினியர்**
**ஒவ்வா யாவுள மற்றே? வெல்போர்க்**
**கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி!**
**நின்னை வியக்கும் இவ்வுலகம் அஃது**
**என்னோ? பெரும! உரைத்திசின் எமக்கே'**
**(புறம்-167)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையர் தினம் தோன்றியது எப்படி?



1910 ஆம் ஆண்டு வாஷிங்டனில் அன்னையர் தினம் நடந்து கொண்டிருந்த நேரம் அதில் கலந்து கொண்ட திருமதி ஸொனோரா டாட் என்பவர் தன்னுடைய இளமைக் காலத்தை நினைத்துப் பார்த்தார். அவருக்கு மொத்தம் ஐந்து சகோதரர்கள். அவர்கள் ஆறு பேரையும் வளர்ப்பதற்காக அவர் தந்தை பட்ட கஷ்டத்தை நினைத்துப் பார்த்தார். சிறிய பண்ணையை மட்டுமே வைத்துக்கொண்டு அவருடைய தந்தை இவர்களை வளர்ப்பதற்காக நிறைய துன்பங்களை அனுபவித்தார். எனவே அன்னையர் தினம் போலவே தந்தையர் தினமும் கொண்டாடப்படவேண்டுமென்று குரல் கொடுத்தார். அப்போது அரசியல் ரீதியாக 'தந்தையர் தினம்' முக்கியத்துவம் பெற்றது. ஆனால், கொண்டாடுவதற்கான நிரந்தர அங்கீகாரம் கிடைக்கவில்லை. 1972 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த நிக்கல்சன் தான் சட்டத்தை உருவாக்கி தந்தையர் தினத்தை நிரந்தரமாக்கினார். தற்போது உலகம் முழுவதும் 'தந்தையர் தினம்' சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 56

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | * | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | * | 9 | * |
| 10 | * | 11 | * | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | * | 18 |
| 19 | 20 | * | 21 | * | 22 |
| * | 23 | 24 | 25 | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. அண்மையில் பிரபலமடைந்த நாடு
3. சின்னத்திரை நாடகங்களை இப்படியும் சொல்வர் (திரும்பியுள்ளது)
6. அறிவு (குழம்பியுள்ளது)
12. வெயிலுக்கு சிறந்தது (திரும்பியுள்ளது)
14. பாவம் செய்தவர்கள் போகும் இடம் என்பர் (குழம்பியுள்ளது)
19. நான் என்பதன் பன்மை (திரும்பியுள்ளது)
23. ஆயிரம் காலத்துப் பயிர் என்பர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஓவியம் என்றும் சொல்லலாம்
2. வேகத்துக்கு பெயர் பெற்ற விலங்கு (தலைகீழ்)
4. குருவுக்கு இருப்போர் (குழம்பியுள்ளது)
8. பொதுஜன ஐக்கிய முன்னணியின் சின்னம் (குழம்பியுள்ளது)
13. விரலுக்குப் போடுவது
15. வெட்கம் (குழம்பியுள்ளது)
17. முன்னாள் பிரபல நாயகி நடிகை

### குறுக்கெழுத்துப்போட்டி - 54 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. எந்திரன் | 1. எருமை |
| 6. தரு | 2. தந்தி |
| 8. மந்தி | 4. ரதி |
| 11. அமைதி | 5. மன்னன் |
| 16. தேன் | 13. அயோத்தி |
| 18. முத்திரை | 17. தேசம் |
| 24. சாதி | 18. முனை |
| | 21. சாரை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கேதீஸ்வரநாதன் சுதானந்,**
**125, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

### பாராட்டுப் பெறுவோர்

01. சி.குகராஜா,
இல. 125/1 B, தாழ்வுபாடு வீதி,
எழுத்தூர், மன்னார்.

02. எஸ்.வரதராஜன்,
25/3, மாரியம்மன் கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

03. சி.சங்கீதா,
அரசடி ஒழுங்கை, வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

04. திருமதி ரி.செல்வத்துரை,
இல. 11 5/1, சென் லோரன்ஸ் வீதி,
கொழும்பு 06.

05. எம்.எப்.எம்.மிஸ்காத்,
மாஞ்சோலைச்சேனை,
சின்னக்கிண்ணியா, கிண்ணியா-3.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................




## கண்ணாடி



பார்வைக் குறைபாடு அழகு உள்ளிட்ட காரணங்களுக்காக கண்ணாடி அணிவது தற்போது பிரபலமாகி விட்டது. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த 'வான்பிரான் போர்' என்ற ஜேர்மனிய விஞ்ஞானி தான் முதன்முதலில் அணியும் முறையை ஏற்படுத்தினார். அவர் கையாண்ட சோதனை முறையில் சில மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டு தற்போதும் கண் பரிசோதனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## தெரிந்துகொள்ளுங்கள்

* அதிகமாக பயிர் செய்யப்படும் பணப்பயிர் பருத்தி

* அரியானா சூறாவளி என்று கின்னஸ் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டவர் இந்திய கிரிக்கெட் வீரர் கபில்தேவ்.

* அப்துல் கலாம் இந்திய ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

* வந்தே மாதரம் என்ற சொல் கீதாஞ்சலி நூலில் உள்ளது.

* இலக்கியத்திற்கான நோபல் பரிசு வென்ற இந்தியர் ரவீந்திரநாத் தாகூர்

* இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர் மார்க்கரெட் தட்சர்.

* ஓநாய்களுக்கு கேட்கும் சக்தி அதிகம். இவை மணிக்கு சுமார் 60 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும்.

* உலகின் முதல் திரைப்படக் கல்லூரி மொஸ்கோவில் (ரஷ்யா) ஆரம்பிக்கப்பட்டது.

* 'சபர்மதி சாது' என்று அழைக்கப்பட்டவர் அண்ணல் மகாத்மா காந்தி.

* பூனையின் ஆயுட்காலம் 12 ஆண்டுகள்.

* அஸ்பிரினைக் கண்டுபிடித்த விஞ்ஞானி டிரஸ்ஸர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் இருளில் குடாநாடு

யாழ்.குடாநாட்டில் மீண்டும் மின்வெட்டு தலைதூக்கியுள்ளதால் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.இது தமிழருக்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள தலைவிதியா என்றும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த.உயர்தரம் மற்றும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்காக மாணவர்கள் படித்துக் கொண்டிருந்த சமயங்களில் 'திருத்த வேலைகள்' என்று கூறி அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டு வந்தது.தற்போது க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை நெருங்கி வருகின்ற நிலையில் மீண்டும் மின்வெட்டு தலைதூக்கியுள்ளது.

இவ்வாறு பரீட்சைகள் நடைபெறும் காலங்களிலும் அண்மிக்கும் நேரங்களிலும் இவ்வாறான மின் கோளாறுகள் ஏற்படுவது தமிழர் பிரதேசங்களில் எழுதப்படாத விதியாக அமைந்துள்ளது.மின்னொளியில் படித்துப் பழக்கப்பட்ட மாணவர்கள் மாற்றொளியில் (மண்ணெண்ணெய் விளக்குகள் மற்றும் மெழுகு வர்த்திகள்) படிப்பது தமக்குச் சிரமத்தை உண்டு பண்ணுகிறது என்றும் தெரிவிக்கின்றனர்.

இன்னும் சில மாணவர்கள் மின்வெட்டு அமுலில் இருக்கின்ற நேரத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தூங்கிவிடுவதும் உண்டு.பின்னர் நேரங்கழித்து வரும் மின்னொளியில் படிப்பதற்குக் கள்ளப்பட்டு கல்விச் செயற்பாடுகளைத் தள்ளிப்போடுவதும் நடக்கின்றது.

யாழ்.குடாநாட்டில் மாற்று ஏற்பாட்டின் கீழ் மின்வெட்டை நடைமுறைப்படுத்தாமல் 24 மணி நேரமும் மின் விநியோகம் வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று மின்சார சபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.எனினும் தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் சுழற்சி முறையிலான மின்வெட்டு மறுஅறிவித்தல் வரை தொடரும் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு சுழற்சி முறையில் மின் விநியோகம் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணம்;

சுன்னாகம் மின் நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளே என்றும் அவற்றின் திருத்தப்பணிகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் குறிப்பிட்ட சில நேரங்களில் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக மின் வெட்டு அமுலில் இருந்து வருகிறது.இவ்வாறு மின்வெட்டு அமுலில் இருக்கின்ற நேரங்களே மாணவர்கள் கல்வி கற்கின்ற நேரங்கள் என்பதும் சுட்டத்தக்கது.

திடீர் திடீரென ஏற்படுகின்ற மின்வெட்டுக்களால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையும் அதேவேளை, தமது மின்சாதனப் பொருட்களும் பழுதடையக் கூடிய அபாயமிருப்பதாகவும் பெற்றோர் மத்தியில் தெரிவிக்கப்படுகிறது.

அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது தொடர்பாக ஒரு முதியவர் கருத்துத் தெரிவிக்கையில்;

'தாங்கள் நினைச்ச நினைச்ச நேரங்களில் எல்லாம் மின்சாரத்தைத் துண்டிப்பாங்க குறிப்பாக பிள்ளைகளின் பரீட்சை நேரங்கள் நெருங்குகின்ற வேளைகளில் தான் இவ்வாறான மின்வெட்டு அதிகம் நடைபெறுகின்றது.குப்பி விளக்குகளில் நாம் படித்துப் பழக்கப்பட்டவர்கள் தான்.ஆனால்,எம்பிள்ளைகள் மின்னொளிக்கல்லவா பழக்கப்பட்டு விட்டார்கள்.

எப்பதான் யாழ்.குடாநாட்டுக்கு 24 மணி நேர மின்சாரம் கிடைக்குமோ தெரியாது. எங்கள் பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேட்க யாருள்ளனர்?' என்றார்.


மற்றொரு நபர் கூறுகையில்;

அடிக்கடி மின்சாரத்தைத் துண்டித்து மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற அதிகாரிகள் சட்ட விரோத மின் இணைப்பைப் பெறும் சூத்திர தாரிகளைக் கண்டு கொள்வதேயில்லை.இவ்வாறு சட்ட விரோத மின்னிணைப்பைப் பெறுவோரின் தொகை அதிகரிக்கின்றமையால் எமக்கு வலுக்குறைந்த மின்சாரமே கிடைக்கின்றது.அத்தோடு இவ்வாறான செயற்பாடுகளால் உயிரிழப்புகளும் சம்பவிக்கின்றன.

சட்டவிரோத மின்பாவனையாளர் குறித்து ஊடகங்களில் வெளிவரும் செய்திகளுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை.இப்போ மின்தடையால் ஒழுங்காக மின்சாரமும் கிடைப்பதில்லை என்று புகார் வெளியிட்டுள்ளார்.

தற்பொழுது யாழ்.குடாநாட்டிலுள்ள ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பாக இருப்பது '24 மணிநேர' மின்சாரம் கிடைக்குமா அல்லது மின்வெட்டு இன்னும் அதிகரிக்குமா? என்பது தான். எதற்கும் பழகிப்போன இதயங்கள் இதற்கும் பழகிப் போய்விடுமோ தெரியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஜினி, கமல் மீது கோபம்



தாஜ்மஹாலில் இருந்து இரண்டு செங்கல்லை உருவியது போலதான் இருக்கிறது இந்த செய்கை. வரலாற்றின் பக்கங்களில் இடம்பெற வேண்டிய இரு இமயங்களை ஒரு போட்டோவாகக் கூட உள்ளே அனுமதித்துவிடக்கூடாது என்கிற அளவுக்குப் பெரும் கோபத்திலிருக்கிறார்கள் ஒப்பனைக் கலைஞர்கள். சமீபத்தில் தங்களுக்கென்று ஒரு கட்டிடத்தைக் கட்டியிருக்கிறது ஒப்பனை கலைஞர்கள் சங்கம். . யாரிடமும் கை நீட்டாமல் வியர்வை சிந்தி உழைத்த சொந்தப் பணத்தில் இந்தக் கட்டிடத்தை உருவாக்கியிருக்கிறார்கள் இவர்கள். தங்களுக்கு வாழ்வு கொடுத்தவர்களையும் தங்களால் வாழ்வு பெற்றவர்களையும் நினைவுகூரும் வகையில் இந்தக் கட்டிடத்தின் சுவர்களில் பல முன்னணி நட்சத்திரங்களின் புகைப்படங்களை மாட்டியிருக்கிறார்கள். 75 ஆண்டுகால தமிழ்ச் சினிமாவின் முக்கிய நடிகர்கள் இருக்கும் அந்தப் புகைப்படத் தொகுப்பில் ரஜினி,கமல் மட்டும் இல்லை! ஏன் இந்த ஓரவஞ்சனை? விசாரித்தால் வந்துவிழும் தகவல்கள் அதிர்ச்சியாக இருக்கிறது. ரஜினி,கமல் இருவருமே சிறிது காலமாக இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களை தங்கள் மேக்கப்புக்குப் பயன்படுத்துவதில்லையாம். மும்பையிலிருந்து வந்திருக்கும் பானு என்ற பெண்மணி தான் இவர்கள் இருவருக்குமே மேக்கப். ஆரம்ப காலங்களில் இவர்களை சூப்பர் ஸ்டார்களாக்கியது எங்கள் ஒப்பனைதான். இப்போது யாரும் தொட முடியாத உயரத்திற்குப் போன பின் எங்கள் மேக்கப் கசக்கிறதோ என்று கவலைப்படுகிறார்களாம் சில மூத்த கலைஞர்கள். பானுவுக்கு இவர்கள் கொடுத்த ஆதரவைத் தொடர்ந்து மேலும் சில பெண்மணிகள் மும்பையிலிருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்துவிட்டார்களாம். பியூட்டி பார்லர் வச்சிருக்கிறவங்க எல்லாம் அந்த வேலையைச் செஞ்சுட்டுபோக வேண்டியது தானே? எதற்காக எங்க பிழைப்பில் கையை வைக்கணும்? அதற்கு இங்குள்ள நடிகர்களும் ஆதரவு தருவது நியாயமா என்றும் குமுறுகிறார்களாம் அவர்கள். கரி பூசுங்க தப்பில்ல. அதுக்காக மேக்கப் போடுறவங்க முகத்திலேயேவா?






## Saturday சினிமா

# கவர்ச்சியுடையார் இகழ்ச்சியடையார்



தமிழ் சினிமா நாயகிகளில் பலரும் சமீப காலமாக கவர்ச்சியை நம்பித்தான் காலத்தை ஓட்டுகிறார்கள் என்பதில் இருவேறு மாற்றுக் கருத்துகள் இருக்க முடியாது. முன்பெல்லாம் சினிமாக்களில் கவர்ச்சிக்கு என்று தனி நாயகி இருப்பார். அவர் நகைச்சுவை நடிகருக்கு ஜோடியாகவோ விலைமாது வேடத்திலேயோ அல்லது ஏதாவது தள்ளுவண்டி இட்லிக் கடைக்காரியாகவோ நடிப்பார். அதற்குப் பிறகு வந்த சினிமாக்களில் ஒரு பாடல் குத்துப்பாட்டாகவும் அந்த குத்துப்பாட்டில் கவர்ச்சி நடிகையின் குத்தாட்டமும் இடம்பெற்றன. ஆனால், சமீப காலமாக கவர்ச்சிக்கு தனி நடிகை தேவையில்லை என்று சொல்கிற அளவுக்குப் படத்தின் நாயகிகளே கவர்ச்சி உடையில் கலக்க ஆரம்பித்துள்ளனர். சினிமாவில் நுழைந்த போது பாவடை தாவணியணிந்து பக்கத்து வீட்டுப் பெண் போல இருந்த நயன்தாரா பில்லா படத்தில் நீச்சல் உடையணிந்து ரசிகர்களை கிறங்கடித்தார். அதேபோல புதுமுக நடிகைகள் பலரும் எதற்கும் ரெடி என்கிற பொலிஸியுடன் தான் சினிமாவில் நுழைகிறார்கள். இதனால் கவர்ச்சிக்குக் [illegible] வளர்ந்து கொண்டிருக்கிறது தமிழ் சினிமா.



தரன்–ஹரன்

# திருமணத்திற்கு த...

இந்தியாவின் நம்பர் வன் நடிகை என்று பெயர் வாங்கிய பிறகுதான் திருமணம் செய்து கொள்வேன் என்கிறார் நடிகை த்ரிஷா. திரையுலகில் 1999 இல் அறிமுகமானவர் த்ரிஷா. சாமி,கில்லி போன்ற பல வெற்றிப்படங்கள் அவரை முன்னணி நடிகையாக்கியது. தெலுங்கிலும் பெரிய நாயகர்கள் ஜோடியாக நடித்துள்ளார். காட்டா மீட்டா படம் மூலம் இந்திக்கும் போனார். தற்போது கமல் ஜோடியாக நடித்து வரும் மன்மதன் அம்பு நவம்பரில் வெளியாகிறது. அஜித்துடன் மங்காத்தா படத்தில் நடித்து வரும் த்ரிஷா, இந்தப் படம் முடிந்ததும் திருமணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப் பட்டது. காரணம் அவருக்கு இப்போது வயது 27 ஐத் தாண்டி

விட்டது. ஆனால்
இதனைக் கடுமை
கிறார். என் வய
வயசா... நான் சி
வந்து எட்டு வருட
ஆகின்றன. ஆர
ரான கதையம்சம்
களில் நடித்தேன்.
பகாலமாக நல்ல
உள்ள படங்கள்
அபியும் நானும்,வி
தாண்டி வருவாய
சிறந்த கதையம்ச
மன்மதன் அம்பு ப
நடித்துக்கொண்டி
நம்பர் வன் நடிகை
வாங்குவதே என்
எனவே, திருமண
ரப்படமாட்டேன்.
எனக்கென்று ஒரு
இப்போது தான் கி
பித்து இருக்கிறது.
நான் நடித்த காட்



உத்தம புத்திரன்-...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருந்தாவனம்–சானா



# ஸ்ரேயாவின் கோபம்

பொது இடங்களில் மிகமிகக் குறைச்சலான உடையில் தான் வருவேன் என்று நடிகை ஸ்ரேயா சபதம் எடுத்துள்ளார் போலிருக்கிறது. ஏற்கனவே சிவாஜி பட விழா, கந்தசாமி பட விழாக்களில் தம்மாத்துண்டு உடையோடு மேடையேறி தமிழ்க் கலாசாரக் காவலர்களின் கடும் கண்டனைத்தைச் சம்பாதித்துக் கொண்டவர் ஸ்ரேயா. ஆனாலும் அம்மணி தனது உடை விடயத்தில் தொடர்ந்து பிடிவாதமாக கஞ்சத்தனம் காட்டி வருகிறார். சமீபத்தில் ஒரு நிறுவனம் சென்னையில் தங்கள் கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்த ஸ்ரேயாவை அழைத்திருந்தது. விடயம் அறிந்ததும் ஸ்ரேயாவை காணப் பெருங்கூட்டம் கூடியது. விழாக் குழுவினர் அவ்வளவு கூட்டத்தை எதிர்பார்க்கவில்லை. அந்த நேரம் பார்த்து மகா குட்டையான ஸ்கர்ட் மற்றும் லோ நெக்டொப்ஸ் அணிந்து வந்திருந்தார் ஸ்ரேயா. அவ்வளவுதான் நெருக்கித் தள்ளியபடி ஸ்ரேயாவை சூழ்ந்தனர் ரசிகர்கள். விழா ஏற்பாட்டாளர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. கூட்டத்தில் சிக்கிய ஸ்ரேயாவை சிலர் இழுக்கவும் கிள்ளவும் முயன்றனர். அவர்கள் பிடியில் தவித்தார் ஸ்ரேயா. ஒரு வழியாக விழா அமைப்பாளர்கள் ரசிகர்களைத் தள்ளி விட்டு ஸ்ரேயாவை மீட்டனர். அதிர்ச்சியில் இருந்து மீளாத ஸ்ரேயா, திட்டிக் கொண்டே விழாவிலிருந்து பாதியில் வெளியேறினார்.



ஸ்ரேயா

# த்ரிஷா நிபந்தனை



...னால், த்ரிஷாவோ
...டுமையாக மறுக்
...வயசெல்லாம் ஒரு
...ன் சினிமாவுக்கு
...வருடங்கள்தான்
... ஆரம்பத்தில் சுமா
...ம்சம் உள்ள படங்
...தேன். ஆனால், சமீ
...ல்ல கதையம்சம்
...கள் வருகின்றன.
...லும், விண்ணைத்
...வாயா படங்கள்
...யம்சம் உள்ளவை.
...ம்பு படத்திலும்
...ாண்டிருக்கிறேன்.
...டிகை எனப் பெயர்
... என் இலட்சியம்.
...மணத்துக்கு அவச
...டன். திரையுலகில்
... ஒரு அங்கீகாரம்
...ன் கிடைக்க ஆரம்
...கிறது. இந்தியில்
... காட்டா மீட்டா

படம் வெற்றியடையவில்லை என்று பேசுகிறார்கள். நடிப்பது தான் என் வேலை. படம் வெற்றியா? தோல்வியா என்றெல்லாம் சிந்திக்கமாட்டேன். இந்திப் படம் நடித்ததன் மூலம் மும்பையில் நிறையப் பேர் பழக்கமாகியிருக்கிறார்கள். மீண்டும் இந்திப் படங்களில் நடிப்பேன். இந்தியாவின் நம்பர் வன் நடிகை என்ற பெயரெடுத்த பிறகுதான் திருமணம் பற்றி யோசிப்பேன்.


# தமன்னா இடத்தைப் பிடிக்கும் ஆசை



தீராத விளையாட்டுப் பிள்ளை நீது சந்திரா கைவசம் ஆதிபகவன் எனும் அமீர் இயக்கத்தில், ஜெயம் ரவி நாயகனாக நடிக்கும் படம் மட்டுமே இருக்கிறது. தேடி வந்த அஜீத்தின் மங்காத்தா வாய்ப்பு கைநழுவி போய்விட்டாலும் அம்மணிக்கு தமிழ் சினிமாவில் தமன்னா இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதுதான் இலட்சியமாம். அதனால் தனியாக தமிழ் ஆசிரியர் வைத்து மும்பையில் உள்ள தன் வீட்டில் தமிழ் கற்று வருகிறாராம் நீது. அமீரின் ஆதிபகவன் அந்த இடத்தை தமிழில் தனக்குப் பெற்றுத் தரும்போது, தானே தமிழில் பின்னணி பேச வேண்டும் என்பதும் அம்மணியின் ஆசையாம். நீதுவின் ஆசை பேராசை என்றாலும் தமிழ் மொழியை விரும்பி கற்கும் நடிகை என்பதால் நிறைவேற வாழ்த்துவோம்.

# திருநங்கையின் காதல்

யாஸ் புரொடக்ஷன் சார்பில் குமார் தயாரித்து விரைவில் திரைக்கு வரவிருக்கும் படம் பால். தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரு திருநங்கை நாயகியாக அறிமுகமாகிறார். படத்தின் இயக்குநர் படம் பற்றிக் கூறும்போது, 'பொதுவாக திருநங்கைகள் கேலிப் பொருளாகவே சித்திரிக்கப்படுகிறார்கள். அதை மாற்றியமைக்கும் விதத்தில் இப்படம் இருக்கும்' என்கிறார். இதில் [illegible]



...-தனுஷ்...க், ஜெனிலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தானின் முக்கோணம்




பெர்முடா முக்கோணம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?இன்றைய நவீன அறிவியல்கூட இன்னதென்று கூற முடியாத மர்மங்களும் வியப்புகளும் அதிர்ச்சியும் நிறைந்த இடம்தான் பெர்முடா முக்கோணம்.இது 'சாத்தானின் முக்கோணம்' என்றும் அழைக்கப்படுகிறது.

புளோரிடா நீரிணைப்பு, பகாமாஸ் மற்றும் மொத்த கரீபியன் தீவுகளையும் உள்ளடக்கிய அட்லாண்டிக்கின் கிழக்கிலிருந்து அசோர்ஸ் வரை ஒரு முக்கோணமாக அமைந்துள்ளது இது.சில ஆய்வாளர்கள் இந்த முக்கோணப் பகுதியில் மெக்சிகோ வளைகுடாவையும் சேர்க்கிறார்கள்.

'பிளைட்-19' என்பது குண்டு வீசும் விமானங்களுக்குப் பயிற்சியளிக்கும் விமானமாகும்.இது அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமானது.இந்த விமானம் 1945 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி ஒரு பயிற்சியில் பங்கு கொண்டது.அதன் பிறகு அட்லாண்டிக் கடலின் மீது பறந்து கொண்டிருந்தது.அது மர்மமான முறையில் திடீரென்று பெர்முடா பகுதியில் மறைந்து போனது.இந்த நிகழ்வைப் பற்றி கடற்படை அதிகாரிகள் ஒரு அறிக்கை அளித்தார்கள்,அந்த அறிக்கையில் உள்ள விவரம் இதுதான்.

'விமானம் தன் கட்டுப்பாட்டை இழந்து காணமல் போவதற்குச் சற்று முன்பு விமானத்தின் திசை காட்டி இயற்கைக்கு மீறிய அளவுகளைக் காட்டியது.அனுபவம் வாய்ந்த விமானி லெப்டினெண்ட் சார்லஸ் கரோல் டெய்லரின் மேற்பார்வையில் தான் இந்த சம்பவம் நிகழ்ந்தது.இந்த நிகழ்வு ஒரு புரியாத புதிராக உள்ளது'.

இதைவிட மர்மமான இன்னொரு நிகழ்ச்சி உண்டு.ஒரு கப்பல் காணாமல்போய்விட்டது.அந்தக் கப்பலை மீட்பதற்காக கடற்படை விமானம் ஒன்று புறப்பட்டது.இந்த மீட்பு விமானத்தில் மொத்தம் 13 பேர் பயணம் செய்தார்கள்.வட அட்லாண்டிக் கடலில் பறந்து கொண்டிருந்தது இந்த விமானம்.சில மணிநேரத்திற்குப் பிறகு இந்த விமானத்திலிருந்து எந்தத் தகவலும் இல்லை.அப்படியே தொலைந்துபோய்விட்டது!இந்த சம்பவமும் பெர்முடா பகுதியில் நடந்தது.

1872 ஆம் ஆண்டு 282 தொன் எடைகொண்ட 'மேரி செலஸ்டி' எனும் கப்பலும் 1864 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் திகதி 'மேரி செலஸ்டி' என்று அதே பெயர்கொண்ட இன்னொரு துடுப்புக் கப்பலும் பெர்முடா முக்கோணப் பகுதியில் மறைந்து போனதாக பழைய கால செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

மேலும் இந்த பெர்முடா முக்கோணப் பகுதியில் 1918 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் திகதிக்குப் பிறகு ஒரு சம்பவமும் நடந்தது.பார்படோஸ் தீவிலிருந்து கிளம்பியது 'யு.எஸ்.எஸ்.சைக்ளோப்ஸ்' எனும் ஒரு பயணிக்கப்பல்.அது எந்தச் சுவடும் இல்லாமல் தனது 309 ஊழியர்களுடன் தொலைந்து போனது.

'ஆரான் பர்' என்பவர் முன்னாள் அமெரிக்க துணை ஜனாதிபதி.இவரது மகள் 'தியோடோசியா பர் அல்ஸ்பான்' தெற்கு கரோலினாவிலிருந்து நியூயோர்க் நகரத்திற்கு 'பேட்ரியாட்' எனும் கப்பலில் பயணம் செய்தார்.பின்பு அவரைப் பற்றி எந்த தகவலும் இல்லை.பெர்முடா முக்கோணத்தில் 1812 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதி நடந்த சம்பவம் இது.

முக்கோண எல்லைக்கு உட்பட்ட பகுதிதான் போர்டோரிகோ.இங்குள்ள சான்ஜுஃ நகரின் வான் பகுதியிலிருந்து ஒரு விமானம் பறந்தது.இந்த விமானத்தின் பெயர் 'டக்லஸ் டிசி-3' மியாமி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த விமானம் திடீரென்று மறைந்து போனது.அதில் 32 பேர் பயணம் செய்தார்கள்.அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. இது நடந்தது 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி. 'அசோர்ஸிலிருந்து பெர்முடா செல்லும் பயணிகள் விமானம் 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி காணாமல் போனது.1949 ஜனவரி 17 இல் ஜமெக்காவிலிருந்து கிங்ஸ்டனுக்குப் பறந்து சென்ற இன்னொரு விமானத்தைப் பற்றிய எந்தத் தகவலும் தெரியவில்லை.இந்த இரண்டு விமானங்களும் தென் அமெரிக்க பிரிட்டிஷ் ஏர்வேஸுக்கு சொந்தமான ஒரே ரக விமானங்கள்.இதுவும் பெர்முடா முக்கோணத்தில் நடந்தது.

இன்னும் ஒரு பெர்முடா தகவல். 'எஸ்.எஸ்.மரைன் சல்பர் குயின்' எனும் கப்பல்.1963 பெப்ரவரி 4 ஆம் திகதி எண்ணெய் ஏற்றிக்கொண்டு புளோரிடா வழியாக சென்று கொண்டிருந்தது.அதில் 39 பயணிகள் இருந்தார்கள்.அந்தக் கப்பலிருந்து பிறகு எந்தத் தொடர்பும் இல்லை.இந்தக் கப்பல் 'காண முடியாத இடத்திற்குச் சென்றுவிட்டது' என்ற தகவலை மட்டும் பத்திரிகைகளில் காணமுடிந்தது.

மேலும் ஒரு வியப்பான சம்பவம் பெர்முடா முக்கோணப் பகுதியில் நடந்தது.இது நடந்தது.1921 இல். 'ரய் ஃபுகு மரு' எனும் ஜப்பானியக் கப்பல் எந்தத் தடயமும் இல்லாமல் ஒட்டுமொத்தமாக மூழ்கிவிட்டது.அப்போது கப்பலிலிருந்து 'கத்திக் கூம்பு போல அபாயம் தெரிகிறது..!விரைந்து உதவிக்கு வாருங்கள்...' எனும் வார்த்தைகள் அபாய அறிவிப்பாக அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது.கத்திக் கூம்பு எனும் வார்த்தை எதைக் குறிக்கிறது என்று இன்றுவரை அறியப்படவில்லை.

மேற்கண்ட அனைத்து மர்மச் சம்பவங்களும் பெர்முடா முக்கோணப் பகுதியில் நடந்திருந்தாலும் ஏன் இப்படி நடக்கின்றன?என்ற கேள்விக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை.

1962 இல் 'பிளைட்-19' தொலைந்துபோன நிகழ்ச்சி குறித்து அமெரிக்காவின் புகழ்பெற்ற இதழ் ஒன்று ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது.விமான ஓட்டி 'நாங்கள் இப்போது எங்கே இருக்கிறோம் என்பதே எங்களுக்குத் தெரியவில்லை...' என்று [illegible] சென்ட் காடிஸ் என்பவர் 'அர்கோசி' எனும் இதழில் எழுதும் போது இந்த விமானம் தொலைந்ததற்கு மாயச் சக்திகளே காரணம் என்று குறிப்பிட்டிருந்தார்.ஆனால் கடற்படை விசாரணைக் குழு அதிகாரிகள் 'விமானம் செவ்வாய் கிரகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது' எனும் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டனர்.இந்தச் சமயத்தில் பெர்முடா முக்கோணம் குறித்த திடுக்கிட வைக்கும் சுவாரஸ்யத் தகவல்கள் உலக நாடுகளெங்கும் பத்திரிக்கைகளில் பிரசுரமாயின.

இந்த மர்ம நிகழ்ச்சிகளுக்கு மேலும் திகிலூட்டும் விதமாக 'நமது கொல்லைப் புறத்தில் கடல் மர்மம்' எனும் கட்டுரையும், 'கண்ணுக்குத் தெரியாத வெளிகள்' மற்றும் 'சாத்தானின் முக்கோணத்தில்' எனும் புத்தகங்களும் வெளிவந்தன.இந்த வெளியீடுகளில் 'வேற்றுக் கிரகத்தைச் சேர்ந்த மாய சக்திகள் கப்பல்களையும் விமானங்களையும் பிடித்துச்சென்றிருக்கலாம். அதில் இருந்த மனிதர்களை அந்த மாய சக்திகள் என்ன செய்தன என்று கடவுளுக்குத்தான் தெரியும்' என்று எழுதப்பட்டிருந்தன.

கரீபியன் தீவு மக்களும் முக்கோணப் பகுதியில் நிகழும் மர்ம சம்பவங்கள் அனைத்திற்கும் மனிதனுக்கு அப்பாற்பட்ட மாயசக்திகளே காரணம் என்று முழுமையாக நம்பினார்கள்.

இந்த மர்மங்களுக்கு மாய சக்திகள்தான் காரணம் என்பதைப் பொய்யாக்கும் வகையில் அரிசோனா பல்கலைக்கழக ஆய்வு நூலகர் டேவிட் குசே என்பவர், 'தி பெர்முடா டிரையாங்கிள் மிஸ்ட்ரி சால்வ்ட்' என்ற நூலை வெளியிட்டார்.அவர் அந்த நூலில் பெர்முடா பகுதியில் நடைபெறும் தொலைநகல்களுக்கு மனிதத் தவறுகள்தான் காரணம் என்று எழுதினார்.மேலும் சூறாவளித்தாக்குதல்,கடலுக்கு அடியில் ஓடும் வளைகுடா நீரோடைகள்,மிகப் பெரிய முரட்டு அலைகள்,கடற்கொள்ளையர்களின் செயல்கள் ஆகியவையும் காரணங்கள் என்று உறுதியாகக் கூறினார். அதற்கான தகவல்களையும் அவர் வெளியிட்டிருந்தார்.சில எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் இது மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளின் வேலை என்று கதை விடுவதற்கு வியாபார நோக்கமே காரணம் என்று அவர் குற்றம் சாட்டினார்.

சில ஆய்வாளர்கள், 'பெர்முடா முக்கோணப் பகுதியில உள்ள கடற்கரைப் பகுதியில் மீத்தேன் ஹைட்ரேட் படிமங்களாகச் சேகரமாகியிருக்கின்றன.இந்த மீத்தேன் ஹைட்ரேட் நீர் அடர்த்தியைக் குறைத்து பெரிய நீர்க் குமிழ்களை உருவாக்கி கப்பல்களை மூழ்கடித்துவிடுகின்றன' என்று தெரிவிக்கின்றனர்.மேலும் சில ஆய்வாளர்கள், 'திடீர் மீத்தேன் வெடிப்புகள் சேற்று எரிமலைகளை உருவாக்கி கப்பல்களை மிதக்க முடியாமல் மூழ்கடித்துவிடுகின்றன' என்ற தகவல்களை வெளியிட்டனர்.

ஆனால் இதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்க நிலவியல் நிறுவனம் ஒரு அறிக்கையை வெளியிட்டது.அதில் 'உலகம் முழுவதும் கடலுக்கடியிலான ஹைட்ரேட்டுகள் பெருமளவில் இருக்கின்றன.குறிப்பாக தென்கிழக்கு அமெரிக்கக் கடற்கரையை ஒட்டிய 'ப்ளெக்ரிட்ஜ்' பகுதியில் இச்சேகரங்கள் மிக அதிகமாக இருக்கின்றன.இருப்பினும் அக்கடற்பகுதியில் பெர்முடா முக்கோணப் பகுதியில் நடப்பதைப் போன்ற எந்த நிகழ்வுகளும் நடப்பதில்லை.பெர்முடா முக்கோணப் பகுதியில் மீத்தேன் ஹைட்ரேட் படிமம் மிகக் குறைவு. எனவே மர்மச் சம்பவங்களுக்கு ஹைட்ரேட்டுகள்தான் காரணம் என்று உறுதியாக சொல்ல முடியாது' என்று தெரிவித்திருந்தது.

இதுவரை ஏராளமான விமானங்களும் கப்பல்களும் பெர்முடா முக்கோணப்பகுதியில் மிகவும் மர்மமான முறையில் மறைந்திருக்கின்றன.ஆயினும் இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்னவென்று உறுதியாகக் கூறமுடியாத நிலையே தொடர்கிறது.

திலகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# செபஸ்தியன் பினேரா

அண்மையில் நடைபெற்ற மிகவும் சிக்கலானதும் பாரியதுமான மனிதாபிமான மீட்புப்பணி நடைபெற்ற சிறு நாடொன்றின் ஜனாதிபதிதான் இன்றைய இவ்வார மெயிலை அலங்கரிப்பவர்.

முழு உலகுமே கடந்த வாரம் திரும்பிப்பார்த்த மீட்புப்பணி சிலியில் அரங்கேறியுள்ளது. சிலியின் ஜனாதிபதிதான் செபஸ்தியன் பினேரா.

69 நாட்கள் எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடன் சிலி சுரங்கத்துள் அகப்பட்டிருந்த 33 பணியாளர்கள் அவர்களுக்கு என்ன நடைபெறுகின்றதென்பதை அறிய முடியாத உறவினர்கள், நண்பர்கள் .

இவ்வாறாக 69 நாட்கள் கடந்தன.ஒவ்வொரு நாளும் ஒரு யுகத்தைக் கடப்பதற்கு ஒத்ததாக இருந்திருக்கும்.

இத்தகைய சூழ்நிலையில்தான் இப்பணியாளர்களை மீட்கும் பணிகள் ஆரம்பமாகி அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இம்மீட்பு நடவடிக்கை கிட்டத்தட்ட 38 மணிநேரம் நடைபெற்றது. ஆனால், குறித்த 38 மணித்தியாலமும் பினேரா அங்கு மீட்புப்பணிகளைப் பார்வையிட்டு மீட்கப்படும் பணியாளர்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்.

ஒரு ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் அவரை சாதாரண மக்களோ சரி அல்லது அரசியல் சாராத வேறு தரப்புகளோ சந்திப்பது மிகவும் கடினமான செயற்பாடாகும்.

இந்நிலையில் 33 பணியாளர்களும் மீட்கப்படும் வரையில் காத்திருந்தமையும் மீட்புப் பணியாளர்களை உற்சாகமூட்டியமையும் பினேராவுக்குப் பெருமை சேர்க்கும் என்று கூறுவதை விட அவர் ஒரு மனிதன் அல்லது மனித நேயமுடையவர் என்று கூறிக் கொள்ளலாம்.

33 சுரங்கப் பணியாளர்களும் மீட்கப்பட்டமை நடைபெற்று முடிந்த பல தசாப்தங்களில் இடம்பெற்ற மிகப்பெரிய சாதனை எனக்கூறப்படுகின்றது.

எத்தனையோ வல்லரசு நாடுகள் அதிசயிக்கத்தக்க வகையில் மீட்புப்பணியை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது பினேராவின் நிர்வாகம்.

இந்நிலையில் பினேராவின் பிறப்பு மற்றும் கல்வியும் அரசியல் பிரவேசம் பற்றி நோக்கினால்;

1949 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி சிலியின் தலைநகர் சந்தியாகோவில் மக்டலேனா அசெனிக்க ரொஷாஹ் மற்றும் ஜோஸ் பினேரா கார்வலோ ஆகியோருக்கு மகனாகப்பிறந்தார்.

தந்தையார் பினேரா கார்வலோ பெல்ஜியத்திற்கும் ஐ.நா.வுக்குமான சிலி தூதுவராக பணிபுரிந்துள்ளார்.பினேராவுக்கு 3 சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். ஒருவர் முன்னாள் அமைச்சராவார்.

பினேரா பிறந்து ஒரு வருடம் கழிந்த நிலையில் பெல்ஜியத்திலும் பின்னர் நியூயோர்க்கிலும் வசித்து அங்கு ஆரம்பக்கல்வியை பயின்றிருந்த நிலையில் 1955 இல் நாடுதிரும்பிய பின்னர் வேபோ டிவினோ கல்லூரியில் உயர்கல்வியை தொடர்ந்து அங்கேயே 1967 இல் பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்தார்.

அத்துடன், ஹவார்ட் பல்கலைக் கழகம்,சிலி கத்தோலிக்க பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பொருளியல் துறையில் தனது பட்டமேற்படிப்பினை நிறைவு செய்து கலாநிதி பட்டத்தினைப் பெற்றார்.

பின்னர் 1971 முதல் 1988 வரை பொருளியல் துறை பேராசிரியராகப் பணிபுரிந்து அதன்பின்னர் தொலைக்காட்சி நிலையமொன்றை நிறுவி சிலியின் கோடீஸ்வரர்களில் ஒருவரானார்.

பின்னர் 1989 ஆம் ஆண்டு முதல் அரசியல் நடவடிக்கைகளில் பிரவேசித்த பினேரா 1990 முதல் இன்று வரை தேசிய மறுசீரமைப்புக் கட்சியில் அங்கம் வகித்து வருகின்றார்.

இவ்வாறான நிலையில் 2001 இல் கட்சித்தலைவராகி 2005 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்து பின்னர் 2009, 2010 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் கடந்த மார்ச் 11 முதல் சிலி ஜனாதிபதியாக பதவி வகித்து வருகின்றார்.

1973 இல் செசிலியாமோரல் மொனரஸை திருமணம் செய்த பினேராவுக்கு 4 பிள்ளைகள் உண்டு.


இவ்வாறான அரசியல் குடும்பப் பின்னணிகளைக்கொண்ட பினேரா மனித குல வரலாற்றில் மிக முக்கியமானதெனக் கருதப்படும் மீட்புப்பணி ஒன்றைத் தனது நிர்வாகத்தின் மூலம் வெற்றிகரமாக முன்னெடுத்து நிறைவேற்றியுள்ளார்.


33 சுரங்கப் பணியாளர்கள் தமது வாழ்நாள் முழுவதும் தமது அனுபவத்தை எவ்வாறு மறக்கமாட்டார்களோ அதே போல பினேரா ஆட்சியில் நடைபெற்ற இம்மீட்புப்பணியும் சர்வதேசத்தினால் நினைவு கூரப்படவேண்டும்.


யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானாக நிறம் மாறும் ஆடை



நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் ஒருவர் தனது புதிய ஆடை வடிவமைப்புடன் தொழில்நுட்பத்தினையும் இணைத்து நவீன ஆடையொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இவரது இந்த ஆடையில் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் ஊடாக நிறச்சாயங்கள் செலுத்தப்படுகின்றன. இவ்வாடை 'பிசியூடோமோர்ப்' என அழைக்கப்படுகிறது.

'பிசியூடோமோர்ப்' இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. உடம்புப்பகுதி வெள்ளை நிறத்தால் ஆனது. மற்றைய பகுதி மெல்லிய குழாய்களினால் ஆனது.

இவ்வாடையின் கழுத்துப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் மூலம் நிறச்சாயங்கள் ஆடைகளுக்குச் செலுத்தப்படுகின்றன. இச்சாயங்களின் மூலம் ஆடை, பலவித நிறங்களில் தோற்றமளிக்கின்றது.

இதனைக் கட்டுப்படுத்தும் இலத்திரனியல் சேர்க்கிட் 9 வோல்ட் மின்கலங்களால் வலுவூட்டப்படுகின்றன.

நிறச்சாயங்கள் தன்னிச்சையாக ஆடைகளின் மீது செலுத்தப்படுவதால் புதுவிதமான டிசைன்களில் ஆடைகள் காணப்படுவதாக இதனை உருவாக்கியுள்ள அனொவுக் விப்ரச்ட் தெரிவிக்கின்றார்.

# அதிகம் சிந்தித்தால் உடல் எடை அதிகரிக்கும்



அதிகம் சிந்தித்தால் உடல் எடை அதிகரிக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். உடல் உழைப்பு அதிகம் இருக்கும் பணிகளில் இருப்பவர்களுக்கு உடல் எடை அதிகரிப்பு என்பது ஏற்படாது. அதேசமயம் உடல் உழைப்பு குறைவாகவும் சிந்தனைத் திறன் அதிகமாகவும் உள்ள பணிகளில் இருப்பவர்கள் உடல் பருமன் சிக்கலால் பாதிக்கப்பட்டு வந்தனர்.


நமது மூளை சிந்திப்பதற்கு ஏராளமான சக்தி செலவாகின்ற போதிலும் உடல் பருமன் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? என்பது மருத்துவர்களுக்குப் புரியாத புதிராகவே இருந்து வந்தது.

இந்நிலையில் அதிகம் சிந்திப்பதே உடல் எடை அதிகரிப்புக்குக் காரணமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதாவது நாம் சிந்திக்கும்போது அதிக சக்தி செலவாவதால் பசி அதிகமாக எடுக்கிறது. இதனால் அதிகமாகச் சாப்பிட்டு விடுகிறோம். இதன் விளைவாக உடல் பருமன் ஏற்பட்டு விடுகிறது.

இது குறித்து பலரிடம் ஆய்வு செய்து பார்த்தபோது புத்தகங்களைப் படித்த பிறகு மூளைக்கு வேலையளிக்கும் கம்பியூட்டர் விளையாட்டுகளில் ஈடுபட்ட பிறகு அவர்கள் உட்கொள்ளும் உணவின் அளவு வழக்கத்திற்கு அதிகமாக இருந்தது தெரியவந்தது.

இந்த உடல் பருமன் பிரச்சினையில் இருந்து தப்ப வேண்டுமானால், மன அழுத்தம் ஏற்படுகிற சிந்தனைத் திறன் அதிகம் தேவைப்படுகிற பணிகளில் இருக்கும் ஆய்வு நிபுணர்கள், விஞ்ஞானிகள் போன்றவர்கள் தினமும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## மதுப்பழக்கத்துக்குக் காரணம் மரபணு

ஒருவருடைய தொடர் மதுப்பழக்கத்துக்கு மரபணுவும் காரணம் என்கிறது மருத்துவ அறிவியல். ஏனெனில் மது செரிமானம் ஆவதற்கு உதவும் நொதிப் பொருளில் அடங்கியுள்ளது மரபணு மர்மம்!

மரபணுக்கள்தான் உடலின் தோற்றத்தையும் இயக்கத்தையும் கட்டுப்படுத்தும் உன்னத சக்தியாக உள்ளன. உடல் என்பது மரபணுக்களால் உருவாக்கப்படும் ஒரு நிரந்தரமற்ற மாயத் தோற்றம்.

இன்று நமது உடலில் வாழும் நகல் மரபணுக்கள் 600 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 20 தலைமுறைகளுக்கு முன்பு 10 இலட்சத்து 48 ஆயிரத்து 576 முன்னோர்களின் உடலில் வாழ்ந்திருக்கின்றன!

மதுவுக்கு அடிமையாகும் நிலை, மரபணுவால் தீர்மானிக்கப்படும் ஒரு மரபியல் நோயாகும். மதுவை சாப்பிட்ட பிறகு அது செரிமானமாவதற்கு ஆல்கஹால் டிகைடிரோஜெனேஸ் எனும் நொதிப் பொருள் தேவை.

இந்த நொதிப் பொருளை உருவாக்கும் மரபணுக்களில் இரண்டு வகைகள் உள்ளன. நமது நாட்டில் 60 சதவீதம் மனிதர்களுக்கு குடிப்பழக்கத்துக்கு அடிமையாக வைக்கும் மோசமான மரபணு வகை இருக்கிறது.

ஆனால், ஜப்பான், கொரியா, சீனா போன்ற மங்கோலிய இனத்தவர்கள் வாழும் நாடுகளில் மதுவுக்கு அடிமையாவதைத் தடுக்கும் நல்ல வகை மரபணு பெரும்பாலானவர்களுக்கு இருக்கிறது. குழந்தைப் பருவத்திலேயே இத்தகைய தீய மரபணு இருப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களை மதுவைத் தொடாமலேயே இருக்கும் படி எச்சரிக்கை செய்தால் மதுவுக்கு அடிமையாவதைத் தடுத்து விடலாம்.




## கிருமிகளைக் கண்டுபிடித்தவர்

முதன்முதலாக கொலரா கிருமிகளையும் மற்ற நோய்க் கிருமிகளையும் கண்டுபிடித்தவர். ஜேர்மன் விஞ்ஞானி ராபர்ட் கோக். 1883 ஆம் ஆண்டில் நோய்க்கிருமிகளை அவர் கண்டுபிடித்தார். அவர் பெயரால் அமைந்துள்ள ஆய்வகம், இன்றும் கொலரா கிருமிகளை முறியடிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ராபர்ட் கோக் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். காசநோய்க் கிருமிகள், கொலரா கிருமிகள், காயங்களில் தொற்றும் கிருமிகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து அவற்றைத் தடுக்கும் முறைகளையும் முதன்முதலில் கண்டுபிடித்தார்.

அதற்குப் பின்புதான் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படுகின்ற பல கொடிய நோய்களை அடையாளம் கண்டுபிடிக்கும் முறைகள் வகுக்கப்பட்டன. இன்றைக்கும் கூட கிருமிகளால் உண்டாகும் நோய்களைப் பற்றிய ஆய்வுகளுக்கு ராபர்ட் கோக்கின் கண்டுபிடிப்புகளே ஆதாரமாய் விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# என்னைத் தெரியுமா...?

அம்மா கொடுத்த போட்டோக்களி லிருந்து ஒரு பெண்ணைப் பார்த்ததும் அதிர்ந்து போய்விட்டான் முகுந்த்!

இவள் நர்த்தனா அல்லவா? ஒருமுறை அவளிடம் வாங்கிக் கட்டிய திட்டு நினைவுக்கு வந்து இடித்தது.

மூன்றாண்டுகளுக்கு முன்பு பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது உடன்படித்த மாணவிகளை இவனும் நண்பர்களும் சமயம் கிடைத்தபோதெல்லாம் கிண்டலும் கேலியும் செய்வது உண்டு. மற்ற மாணவிகள் தங்கள் பாட்டுக்குப் போக இந்த நர்த்தனா மட்டும் ஒரு நாள் சண்டைக்கோழியாய் சிலிர்த்தெழுந்து இவர்கள் அனைவரையும் மோசமாகத் திட்டி எச்சரித்துவிட்டுச் சென்றுவிட்டாள் முக்கியமாக முன்னால் நின்ற முகுந்தை!

அதன் பிறகு அவளை மட்டும் எவனும் டாவடிப்பதில்லை!

அப்படிப்பட்ட நர்த்தனா இன்று இவனுக்காகப் பார்க்கும் மணப்பெண்களில் ஒருத்தியாக!

ஒருவேளை நம்மை நினைவில் வைத்திருந்து முறைப்படி பெண் பார்க்கப் போகும் போது அடப்பாவி... உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா என் போட்டோவைப் பார்த்தப்புறமும் என்னைப் பேசி முடிக்க வந்திருப்பே? பெண்கள் கிட்ட எப்படி நடந்துக்கணும்னு கூட தெரியாத நீ எனக்குப் புருஷனா? என்று அத்தனை உறவுக்கூட்டம் முன்பாகவும் பொங்கி விட்டால் என்னாவது... அத்தனை பேர் முன்னாலும் அல்லவா அவமானப்பட்டு நிற்க வேண்டியிருக்கும்...

இதனால் அம்மாவுக்கு பதில் சொல்ல கொஞ்சம் தயங்கினான்.

ஆனால், அம்மாவோ தொடர்ந்து நச்சரித்தாள்.

'என்னடா... பெண் வீட்ல இருந்து தொடர்ந்து என்னாச்சு...என்னாச்சுன்னு கேட்டுக்கிட்டே இருக்காங்க. பொண்ணு பிடிச்சிருக்கா இல்லியான்னு சொன்னா அவங்க மற்ற ஏற்பாட்டைச் செய்வாங்க இல்லியா?' அம்மாவின் விடாப்பிடி தொடர்ந்தது.

முகுந்த் முன்னைவிட சற்று சதை போட்டிருந்தான். கிராப் ஸ்டைல் மாறியிருந்தது. அதனால் ஒருவேளை பெண் பார்க்கப் போகும் போது நர்த்தனா தன்னைச் சரியாக அடையாளம் தெரிந்து கொள்ளாமல் போய் விடலாம் இல்லையா?

மனதுக்குள் நர்த்தனாவின் அழகுபடுத்திய பாட்டில் அவன் இப்படியும் யோசித்தான். முடிவில் பயத்தை ஆசை வென்றது.

பெண் பார்க்கும் படலத்தின்போது நேருக்கு நேர் பார்த்தும் கூட நர்த்தனாவால் அவனைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. தேநீர் கொடுக்கும்போது மட்டும் நேருக்கு நேர் பார்த்தாள். ஒரு கணம் நெற்றி சுருங்கி இயல்பானது. அவனை எங்கையோ பார்த்திருக்கிறோம் என்பதாக அவள் அந்தக் கண நேரத்தில் யோசித்ததாக எடுத்துக்கொண்டு உள்ளூர பயந்திருந்தான்.

ஆனால், கொஞ்ச நேரத்தில் பெண்ணுக்கும் மாப்பிள்ளை பிடித்திருப்பதாக வந்த தகவலில் சற்று முன் குடித்த தேநீர் அப்போதுதான் தொண்டைக்குள் இனிக்க முகுந்த் மனதில் இறக்கை கட்டிய உற்சாகம்.

திருமணம் முடிந்து முதலிரவு.

அவள் அறைக்குள் கால் வைத்ததும் 'என்னை இதற்கு முன்பு பார்த்த நினைவிருக்கிறதா நர்த்தனா?' என்று கேட்டான் முகுந்த்.

'இல்லையே!' திகைத்தாள் நர்த்தனா.

கல்லூரி நிகழ்ச்சியை அவன் குறிப்பிட்டபோது அவளுக்கு ஞாபகம் வந்துவிட்டது!

'ஓ...இப்ப ஞாபகம் வருது. நீங்களும் கும்பலோடு கும்பலாய் என்னிடம் கலாட்டா செய்திருக்கிறீர்கள்...சரியா?'

'இவ்வளவு சாதாரணமா சொல்றே? இது தெரிஞ்ச பிறகும் என்மேல உனக்கு கோபம் வரலியா?'

'எதுக்கு வரணும்? அப்ப அந்த வயசுல எல்லாரும் பண்ற கலாட்டாதானே அது. உங்களைக் கூட நான் திட்டியிருப்பேன். பாடசாலை,பல்கலைக்கழகத்துக்குப் போற வயசை நிறையப் பேர் காதல் வர்ற வயசுன்னு நினைச்சு பெண்களை கலாட்டா பண்றதிலேயே முனு வருஷத்தையும் ஓட்டிடுறாங்க. முடிவு பாடம் மாதிரியே காதலும் அரியர் ஆயிடுது'

'ஆனா நான் பாஸ் ஆயிட்டேன்...' சிரித்தான் முகுந்தன்.

'நானும்தான்...எங்க வீட்டில் இருந்து மணப்பெண்ணா உங்க வீட்டுக்கு...' சொல்லியபடி அவளும் சிரிக்க...

அவர்களுக்குள் காதல் தொடங்கியிருந்தது.



நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## அன்புள்ள நண்பா...

மோன நாகத்திலே,
மூழ்கிக் கிடந்த அந்த முன்னிரவிலே!
உதயமானதிக் கவி...

இறந்த நாட்களைப் புதைத்தபின்
நினைவென்னும் புற்கள் முளைக்கும்!
இறவாத எம் நட்பை,அந்த
நினைவெனும் புற்களூடு சென்று
திரும்பிப் பார்க்கிறேன்!
நினை விருக்கிறாதா உனக்கு?

பள்ளியிலே முதல் நாள்...
முதலென்ன கேட்டேன்? பதிலென்ன
சொன்னாய்?
இறந்த காலம் என்பது
நினைத்துப் பார்க்க மட்டும் தான்!
ஆனால் நட்புக்கது விதிவிலக்கு!

உனக்கொன்று தெரியுமா?
நட்புக்கும் கற்புண்டு!

களங்கம் வராது காப்பது
இருவர் கடமை புரிந்ததா?
முதலில் பிரிந்தது தெரியுமா?
பொய்க் கோபம் பூண்டது புரியுமா?

நீண்ட நினைவில் நீவரவே,
எனக்குள்ளேயே அழைக்கின்றேன்
'அன்புள்ள ந...ண்...பா... என்று'!

சுதுமலைத்தம்பி.

## என் கவிதைகளை ஒன்றும் செய்ய முடியாது!

வெள்ளையர்களிடம்
விடுதலை பெற்று
வீரமண்ணை மீட்டெடுத்த
புதல்வர் மடிந்த மண்
மலையகம்!

வாழும் காலம் நூற்றில்
பாதி-நாங்கள்
வளரும் இடமோ
குதிரைப்பட்டி!

ஓட்டைக்கூரையில்
நிலவைப்
பார்க்கும் நாங்கள்
எப்போது உண்மைக்
காற்றை
சுவாசிப்பது?

எம் உழைப்பிற்கு
இட்ட பட்டம்
தோட்டக்காட்டான்
பட்டமளித்தவன்
சுரண்டித் தின்னும் கூத்தான்!

மலைக்கும் மாடிக்கும்
இரத்தம்
வேறுபட்டதோ? -ஏன்
இறைமைப் பௌர்ணமி
காட்ட
மறுக்கிறது மேகம்

எங்களை மறைத்து
வையுங்கள்
எம் உழைக்கும்
கரங்களின் ஜனப்பட்ட
உணர்வுகளுக்கு உயிர்கொ
டுக்கும் என் கவிதைகளை!
உங்களால் ஒன்றும்
செய்ய முடியாது.

நல்லு.விஜயகுமார்.

## உன்னைப்போல் யார்?

உன்னிடம் என்
ஊமைக் காதலை வெளிப்படுத்திய பின்
சமுத்திரத்தை நீந்திக் கடந்ததாய்
ஒரு நினைப்பிருந்தது எனக்கு
நீருக்கடியிலிருந்து வந்து
மூச்சுவிட்ட நிம்மதியிருந்தது
எனக்கு

அன்றைய இரவு வானையும்
உன் அகன்ற முகம் போன்றிருந்த
நிலவையும் அதனிடம் எழில்
பிச்சை கேட்கும்
நட்சத்திரங்களையும் என்
ஆளுமைக்கு உட்படுத்தி விட்டதாய்
ஒரு கம்பீரம் தெரிந்தது எனக்கு

வீசிய தென்றலும்
உரசிப் போன மின்மினிகளும்
உனை வளைத்து விடுமோ
என்ற பயமிருந்தது
வலிகள் உனை
விழிக்க வைக்குமோ
என்ற பயமிருந்தது

ஒவ்வொரு அழகும்
எனக்கு உன்
அடிமையாய்தான்
அன்று முதல் தெரிந்தது
அவைகளில் உன்னிடம் தோற்ற
முகச் சுருக்கங்கள் தெரிந்தது

கோபம் வந்த வேளைகளில்
உன் சுருங்கூந்தல்
முகம் தடவிப் போவதாய்
தெரிந்தது என்னில்
கோபமும் அடங்கிப் போனது
அழகு என்று மற்றவர்
எதை சொல்லினும்
உன் உருவே அவ்வேளை
என் கண் முன்னே
கடந்து சென்றது
உன்னிடம் காதலை சொன்ன
பொழுதிலிருந்து

என் பட்டினிப் பொழுதுகளில்
உன் ஞாபகங்கள் எனக்கு
விருந்தாய் இருந்திருக்கிறது
உன் முகம் கண்ட பின்புதான்
அன்றைய விடியல் என
அந்நாளை கணித்திருக்கிறேன்.

பா.ரிசாந்தன், ஹொப்டன்.

## நானும் மனுசன்தானே புத்தன் அல்ல...

விஷயம் அறியாமல் வசை பாடினேன் என்றார்கள்
அவளின் உணர்வுகள் தெரியாமல்
நான் வார்த்தைகளை உமிழ்ந்தேன் என்றார்கள்
அங்கொன்று இங்கொன்று கோர்த்து
திரித்து பேசுகிறேன் என்றார்கள்
வெறுக்காதே அன்பு செய் என்று கருத்தும் கூறினார்கள்
அவள் இயல்பாக இல்லை என்று சொன்னால்
இது என் விபரீத கற்பனை என்றார்கள்
திடீர் விலகல் திடீர் மௌனம்
திடீர் அசாதாரண நடத்தைகள்
எங்கனம் என் மனம் பொறுக்கும்
நானும் மனுசனே புத்தன் அல்ல!

எஸ்.மனோஜ், கொழும்பு-15.

## நட்பின் கோலங்கள்

நாட்கள் நகர்ந்து
செல்கையிலே நம்
நட்பின் நினைவும்
மெல்ல நகர்கின்றது
நம் வாழ்க்கைப்
பாதையில் என்றென்றும்
நிழலாய்த் தொடரும்
நம் நட்பின்
இறந்த கால இனிமைகள்
வார்த்தைகளுக்கு
அப்பாற்பட்ட
வசந்த காலப் பயணங்கள்
ஒரே பிரசவத்தில்
எண்ணற்ற குழந்தைகளைப்
பிரசவித்த எங்கள்
கல்லூரித் தாயவளைக்
கேட்டால் தெரியும்
நாம் கொண்ட
நட்பின் ஆழம் என்னவென்று!

நினைத்தாலே இனிக்கும்
நேசம் கொண்டு பழகிய
அந்தப் பொழுதுகள்
நிம்மதிகள் துளிர் விடும்
எம் வாழ்வில்
என்றும் அழியாத
நட்பின் கோலங்கள்.

செல்வநாயகம் ரவிசாந்,
வீரமனை,குப்பிளான்.

## தாய்மை

மாதா; பிதா;குரு;
உலகின் கண் வாழ்;
கண்ணியமிகு மும்மூர்த்திகள்.

உலக வாழ்வில்;
மனித குலத்தின்;
முதன்மை இடத்தில்;
கருணை வடிவாய்
பாங்காய் அமர்ந்து
பணி புரிபவள்
கண்கண்ட தெய்வமாம்
பெற்றெடுத்த அன்னையே.

அன்பில் முதன்மை;
அரவணைப்பில் முதன்மை;
அமுதூட்டலில் முதன்மை;
பாசத்தில் முதன்மை;
நேசத்தில் முதன்மை;
கெஞ்சலில் முதன்மை;
கொஞ்சலில் முதன்மை;

தாயின் பாதத்தடியில் சுவனம்.
அருள் மொழி பகர்ந்தார்;
மனித குலம் உய்ய;
இறுதியாய் வந்த;
இறைதூதர் நபிகளார்.

இம்மை வாழ்வில்
நிறை மனதுடன்
தாயின் சுக;நலன்;
பேணி நடந்தால்;
மறுமை வாழ்வில்;
சுவனத்தின் கதவுகள்;
வாழ்த்தி வரவேற்க;
திறந்தே இருக்கும்.

'கற்பிட்டி வஹாப்'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செக்ஸில் நாட்டமில்லாததால் பிரிட்டனில் பலர் விவாகரத்தாம்



50 வயதுக்கு மேல் பாலியல் ரீதியான உறவில் நாட்டமில்லாததால் பிரிட்டனில் விவாகரத்து அதிகரித்துக் கொண்டு வருகிறதென திடுக்கிட வைக்கும் புள்ளி விபரங்கள் புதிய ஆய்வின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

குழந்தைகள் பெரிதாகும் போது தம்பதிகளுக்குள் உள்ள நெருக்கம் குறைவதே இது போன்ற முடிவுகளுக்கு பெரும்பாலும் காரணமாக அமைந்துவிடுகிறது என்பது புள்ளி விபரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 50 வயதிற்கு மேற்பட்ட 1900 விவாகரத்தாகும் தம்பதிகளிடையே நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 28 சதவீதப் பெண்கள் தங்கள் கணவரின் உணர்வுகளைக் குறை கூறுகின்றனர்.

மேலும் 27 சதவீதத்தினர் பொறுப்புகள் குறைந்துவிடுவதால் இந்த நிலை ஏற்படுவதாகவும் 25 சதவிகிதத்தினர் உடலுறவில் நாட்டம் குறைவதையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த வருடம் பிரிட்டனில் 50 வயதுக்கு மேல் விவாகரத்தானவர்களின் எண்ணிக்கை 22,000 என தேசிய புள்ளிவிபர அலுவலகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



உலகின் மிக நீளமான பூனை என்ற பெருமை அமெரிக்கப் பூனை ஒன்றுக்குக் கிடைத்துள்ளது.ஸ்டீவி என்ற இந்தப்பூனையின் பெயர் கின்னஸ் பதிவுப்புத்தகத்தில் இடம்பெறவுள்ளதாக நீனோ கெஸட் என்ற சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் மூக்கு முதல் வால் நரம்பு வரையான நீளம் 48.5 அங்குலமாகும்.சுமார் நான்கரை அடி நீளமான பூனையாக இது காணப்படுகின்றது.முன்னர் உலக சாதனை படைத்த பூனை 48 அங்குலங்கள் மட்டுமே நீளமானது.

# 1.5 மில்லியன் கார்களை திரும்பிப்பெற முடிவெடுத்துள்ள டொயாட்டா நிறுவனம்

உலகம் முழுதிலும் டொயாட்டா நிறுவன கார்களை பயன்படுத்தும் பலர் பிரேக் சரியாக இயங்கவில்லை எனக் கொடுத்த புகாரினைத் தொடர்ந்து குறையிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள 1.5 மில்லியன் கார்களை திரும்பப் பெறும் முடிவை அந்நிறுவனம் எடுத்துள்ளது.

இந்த வருடத்தின் முற்பகுதியில் உலகின் மிகப்பெரிய கார் நிறுவனமான டொயோட்டாவின் கார்களில் பாதுகாப்பு சரியான வகையில் இல்லை என்ற சர்ச்சை உண்டானது அந்நிறுவனத்திற்கு பெரும் பாதிப்பை உண்டாக்கியது.இதைத் தொ... ஜப்பான்,அமெரிக்கா உள்ள... நாடுகளில் டொயோட்டா காரை வாங்கியோர் இதன் பிரேக்கில் இருந்து திரவம் கசிவதாகப் புகாரளித்தனர்.

இது பெரிய பிரச்சினை என்பதை உணர்ந்த அந்நிறுவனம் செப்டம்பர் 2004 முதல் பெப்ரவரி 2006 வரையிலான காலக்கட்டங்களில் தயாரிக்கப் பட்ட கார்களை திரும்பப் பெறுவதென அறிவித்துள்ளது.பிரிட்டனில் மட்டும் 2,081 லெக்சஸ் மொடல் கார்கள் ... என்பது ...



**ஆசிரியை:** பாபு சாப்பிடுவதற்கு முன்னதாக நீ பிரார்த்தனை செய்வதுண்டா?பொய் கூறினால் எனக்குக் கோபம் வரும்.உண்மையைக் கூறு.

**பாபு:** உண்மையைத்தான் ரீச்சர் கூறுகிறேன்.பிரார்த்தனை செய்துவிட்டுத்தான் சாப்பிட வேண்டிய அளவுக்கு எனது தாயார் ஒன்றும் அவ்வளவு மோசமாக சமையல் செய்பவரல்ல.

☺ ☺ ☺

**தந்தை:** மகனே இன்று உனது பிறந்தநாள்.என்ன பரிசு வேண்டும்?

**மகன்:** நான் பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை அப்பா.எனக்கு ஒரு ரேடியோ வேண்டும். அந்த ரேடியோ ஒரு ஸ்போர்ட்ஸ் காருக்குள் பொருத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

☺ ☺ ☺

**கருணா:** மற்றையவர்களினால் செய்ய முடியாத எதையும் உன்னால் செய்ய முடியுமா?

**அருணா:** நிச்சயமாக,எனது கையெழுத்தை என்னால் வாசிக்க முடியும்.

☺ ☺ ☺

**ஆசிரியை:** ஒரு கழுதையை மனிதன் ஒருவன் அடித்ததைக் கண்டு அதை நான் தடுத்து நிறுத்தியதாக வைத்துக்கொள்ளுங்கள். நான் எத்தகைய பண்பை வெளிக்காட்டியதாக கூறுங்கள் பார்க்கலாம்.

**மாணவன்:** சகோதர பாசத்தை.

☺ ☺ ☺

**ஆசிரியை:** சுரேகா, 'எனது நாய்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதச் சொன்னேன். உனது கட்டுரை உனது சகோதரி சுமித்ரா எழுதிய கட்டுரையை ஒத்ததாகவே இருக்கிறதே. சுமித்திராவின் கட்டுரையைப் பார்த்து எழுதினாயா?

**சுரேகா:** இல்லை ரீச்சர். ஒரே நாயைப் பற்றித்தான் நாங்கள் இருவரும் எழுதினோம்.

☺ ☺ ☺

**பாமா:** எந்தப் புத்தகத்தை நீ பெரிதும் விரும்புகிறாய்?

**உமா:** எனது கணவரின் காசோலைப் புத்தகத்தை

☺ ☺ ☺

**கணவன்:** எனது மூளை எங்கள் மகனுக்கு இருக்கிறது பார்த்தீரா?

**மனைவி:** ஆமாம்.எனது மூளை என்னிடம் இருக்கிறதைப் பார்த்தாலே எனக்கு உண்மை புரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் வென்ற தங்கங்கள்



கொமன்வெல்த் விளையாட்டரங்கில் எந்த முறையும் இல்லா தளவுக்கு இம்முறை தடகளத்தில் இந்திய வீர, வீராங்கனைகள் முத்திரை பதித்துள்ளனர். டில்லி கொமன்வெல்த் தடகளத்தல் சிறப்பாக செயல்பட்டு பதக்கங்கள் வென்ற நட்சத்திரங்களுக்கு இந்தியா முழுவதும் பாராட்டு விழாக்களும் நடைபெறுகின்றன.

**கிருஷ்ண பூனியா:** அரியானாவைச் சேர்ந்த இளம் தட்டெறிதல் வீராங்கனை கிருஷ்ண பூனியா இவர் தங்கம் வென்று சாதித்தார். இதன் மூலம் கொமன்வெல்த் போட்டிகளில் தடகளத்தில் முதல் முறையாக தங்கம் வென்ற இந்திய வீராங்கனை என்ற பெருமை பெற்றார்.

தவிர இவரது வெற்றியின் மூலம் 52 ஆண்டுகளுக்குப் பின் கொமன்வெல்த் தடகளத்தில் தங்கம் வென்று சாதித்துள்ளது இந்திய அணி. கிருஷ்ண பூனியாவுடன் இணைந்து தட்டெறிதல் போட்டியில் இந்திய வீராங்கனைகளான ஹர்வந்த் கவுர் (வெள்ளி), சீமா அன்டில் (வெண்கலம்) ஆகியோரும் சாதித்துக் காட்டியுள்ளனர்.

**மின்னல் வேக மங்கைகள்:**

ஒலிம்பிக், கொமன்வெல்த் உள்ளிட்ட உலகின் முக்கிய போட்டிகளில் தடகளத்தில் இந்திய வீர, வீராங்கனைகள் சாதிப்பது மிகவும் அரிது தான். இந்நிலையில் டில்லி கொமன்வெல்த் 4X400 மீற்றர் ஓட்டத்தில் இந்திய வீராங்கனைகளான சினி ஜோஸ், அஷ்வினி, மந்தீப் கவுர், மன்ஜித் கவுர் ஜோடி தங்கம் வென்று அசத்தியுள்ளது.

போட்டி தூரத்தை மின்னல் வேகத்தில் கடந்த இந்த மங்கைகள் இந்திய அணிக்கு பெருமை சேர்த்தனர். இதேபோல் 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் இந்திய வீராங்கனைகளான கீதா சாதி, சிரபாணி நந்தா, பிரியா, ஜோதி ஆகியோர் வெண்கலம் வென்று அசத்தினர்.

ஆண்கள் பிரிவில் தடகளத்தில் இந்திய அணிக்கு நம்பிக்கையளித்த வீரர் ஹார்மிந்தர் சிங் 20 கிலோமீற்றர் நடை போட்டியில் தனது சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்திய இவர் வெண்கலம் வென்றார். டில்லி கொமன்வெல்த் போட்டியில் இந்தியா சார்பில் முதன் முதலாக பதக்கம் வென்றவர் இவர் தான். இவரையடுத்து 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் ரஹமதுல்லா, சுரேஷ் சத்யா, ஷமீர், அப்துல் நஜீம் வெண்கலம் பெற்றனர்.

**சாதனை வீரர்கள்:** ஓட்டப் பந்தயம் நடைப்போட்டி தவிர மற்ற பிரிவுகளிலும் இந்திய வீரர்கள் அசத்தினர். தட்டெறிதல், இந்தியாவின் விகாஸ் கவுடா வெள்ளி வென்று சாதித்தார். இதேபோல முப்பாய்ச்சல் பிரிவில் ரஞ்சித் மகேஸ்வரி, காசிநாத் நாயக் ஆகியோரும் வெண்கலம் வென்றனர்.

**அதிரடி எழுச்சி:** டில்லி கொமன்வெல்த் போட்டிகளின் மூலம் தடகளத்தில்புதிய எழுச்சி பெற்றுள்ளது. இந்திய அணி இனிவரும் காலங்களில் முறையான பயிற்சியும் வழிநடத்தலும் இருந்தால் இந்திய வீரர், வீராங்கனைகள் ஒலிம்பிக் உள்ளிட்ட போட்டிகளில் சாதிக்க அதிக வாய்ப்புள்ளது.




# லலித் மோடி எங்கே?



ஐ.பி.எல். முறைகேடு தொடர்பாக தேடப்பட்டு வரும் அதன் முன்னாள் தலைவர் லலித் மோடி எங்கிருக்கிறார் என்று தெரியாத நிலையில், தான் ஐஸ்லாந்து தீவில் இல்லையென்று அவரே அறிவித்திருக்கிறார்.

ஐ.பி.எல். முறைகேடு தொடர்பாக அதன் தலைவர் பதவியிலிருந்து லலித் மோடி நீக்கப்பட்டார். லலித் மோடி மீது 470 கோடி ரூபா மோசடிப் புகார் கூறப்பட்டுள்ளது. அவர் மீது சென்னைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் அன்னிய செலாவணி மோசடியிலும் அவர் சிக்கியுள்ளார். அவரை விசாரிக்க அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் முடிவு செய்திருந்தனர். ஆனால் அவர் விசாரணைக்கு ஆஜராகாமல் வெளிநாட்டில் பதுங்கியுள்ளார். இதனால் அவரது கடவுச்சீட்டை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அவர் கிரிக்கெட் சபையின் ஒழுங்கு நடவடிக்கை விசாரணையில் பங்கேற்கவில்லை.

தனது உயிருக்கு மும்பைத் தாதாக்களால் ஆபத்திருப்பதாகக் கூறியிருந்தார்.

லண்டன், இத்தாலி, தென்னாபிரிக்கா, பாலித்தீவு, ஜேர்மனி இப்படி ஒவ்வொரு நாடாக லலித் மோடி சுற்றித் திரிகிறார். இதற்கிடையே அவர் ஐஸ்லாந்து நாட்டிலிருப்பதாகவும் அங்கு குடும்பத்தினருடன் குடியேற குடியுரிமை கேட்டு விண்ணப்பித்திருப்பதாகவும் தகவல் வெளியானது.

இந்தத் தகவலை லலித் மோடி 'டுவிட்டர்' இணையத்தளத்தில் மறுத்துள்ளார். அவர் கூறும்போது நான் ஐஸ்லாந்து நாட்டுக்குச் செல்லவில்லை. அப்படி வெளியான தகவலில் உண்மையில்லை என்று கூறியுள்ளார். ஆனால் அவர் எங்கிருக்கிறார் என்ற தகவலைத் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையும் லலித் மோடியும் பரஸ்பரம் சுமுகத் தீர்வுக்கு வரவேண்டுமென்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

லலித் மோடியின் வழக்கறிஞர் மெஹ்மூத் ஆப்தி இந்த விவகாரத்தில் லலித் மோடி சுமுகத் தீர்வு காணவே விரும்புவதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 27 ஆம் திகதிக்குள் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் லலித் மோடியும் சுமுகத் தீர்வுக்கு வரவேண்டும் அல்லது இதில் தலையிட வேண்டிவருமென்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முன்னதாக மும்பை உயர்நீதிமன்றம் பி.சி.சி.ஐ. ஒழுங்கு நடவடிக்கைக்குழுவை மாற்றி அமைக்க வேண்டுமென்று லலித் மோடி செய்திருந்த விண்ணப்பத்தை நிராகரித்ததும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நீச்சல் சாதனையாளர்



ஒலிம்பிக் போட்டிகளில் தொடர் நீச்சல் பிரிவில் 8 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தவர் அமெரிக்க வீராங்கனை ஜென்னி தொம்சன். ஒலிம்பிக்கில் மொத்தம் 12 பதக்கங்களை அவர் வென்றுள்ளார்.

'பட்டர்பிளை' மற்றும் 'ப்ரீஸ்டைல்' பிரிவிலும் ஜென்னி சிறந்து விளங்கினார். மாசாசூசெட்ஸ் மாகாணத்திலுள்ள டான்வெர்ஸில் 1973 ஆம் ஆண்டு பிறந்தார் ஜென்னி. அவரது இயற்பெயர் ஜெனிபர் பெத் தொம்சன். 7 வயதிலிருந்தே நீச்சல் பயிற்சியில் தன்னை ஈடுபடுத்தி கொண்டார் ஜென்னி.

1987 ஆம் ஆண்டு நடந்த பான் அமெரிக்கா விளையாட்டுப் போட்டியே ஜென்னி கலந்து கொண்ட முதல் சர்வதேச நீச்சல் போட்டியாகும். 14 வயது நிரம்பிய நிலையில் இப்போட்டியில் 50 மீற்றர் 100 மீற்றர் ப்ரீஸ்டைல் பிரிவுகளில் பட்டம் வென்றார்.

1991 ஆம் ஆண்டு நடந்த உலக நீச்சல் போட்டியில் 400 மீற்றர் ப்ரீஸ்டைல் பிரிவில் ஜென்னி இடம்பெற்றிருந்த அமெரிக்கக் குழு தங்கம் வென்றது. 1992 ஆம் ஆண்டு பார்சிலோனாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 50 மீற்றர் 100 மீற்றர் ப்ரீஸ்டைல் பிரிவில் உலக சாதனையுடன் தங்கம் வென்றார் ஜென்னி.


1996 ஆம் ஆண்டு அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் தொடர் நீச்சல் பிரிவுகளில் 3 தங்கங்களை அவர் வென்றார். 1997-1999 ஆம் ஆண்டுகளில் மட்டும் உலக நீச்சல் போட்டியில் 8 சாம்பியன் பட்டங்களை வென்றார். இதில் மூன்று முறையும் 100 மீற்றர் ப்ரீஸ்டைல் பிரிவில் தொடர்ந்து தங்கம் வென்று ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

ஜென்னியில் தொடர் நீச்சல் ராஜ்யம் 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கிலும் தொடர்ந்தது. இந்தப் போட்டியிலும் மூன்று தங்கங்களை அவர் வென்றார். 2001 ஆம் ஆண்டு மருத்துவக் கல்வி பயில்வதற்காக நியூயோர்க் சென்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் தனது படிப்பை மேற்கொண்டார். அங்கு படிக்கும் போதே 2002 ஆம் ஆண்டு ஜப்பானில் நடந்த பான் பசிபிக் நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு 1 தங்கம் உட்பட 5 பதக்கங்களை வென்றார்.

2004 ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட அமெரிக்க நீச்சல் அணியில் இடம்பெற்றிருந்தவர்களில் ஜென்னி தான் வயது முதிர்ந்தவர் (31) எனினும் அந்தப் போட்டியில் 400 மீற்றர் தொடர் நீச்சலில் அவரது குழு வெள்ளி வென்றது.

ஒலிம்பிக் போட்டிகளில் மட்டும் 8 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களை ஜென்னி வென்றுள்ளார். உலக நீச்சல் போட்டி, பான் பசிபிக் என எடுத்துக் கொண்டால் அவரது பதக்கப் பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே செல்லும். 2006 ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்ற ஜென்னி இப்போது மயக்க மருந்தியல் நிபுணராக போஸ்டனில் உள்ள மகளிர் மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார்.

## தெரிந்து கொள்ளுங்கள்






# ஐந்து முறை உலக சாம்பியன்

ஐந்து முறை உலகத் தட கள சாம்பியன் பட்டம் வென்றவர் அமெரிக்காவின் மெரிஸ் கிரீன். 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் சிறந்து விளங்கிய கிரீன் 4 முறை ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றவர்.

கிரீன் 1974 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி அமெரிக்காவின் கன்சாஸ் சிட்டியில் பிறந்தார். 1995 ஆம் ஆண்டு கோதன் பேர்க்கில் நடந்த உலகத் தட கள போட்டியில் பங்கேற்றதே, கிரீனின் முதல் சர்வதேச தட கள பிரவேசமாகும். எனினும், அந்தப் போட்டியில் காலிறுதிச் சுற்றில் கிரீன் தோல்வியடைந்து வெளியேறினார்.

1997 ஆம் ஆண்டு அவரது தட கள வாழ்க்கைக்கு நல்லதொரு தொடக்கமாக அமைந்தது. அந்த ஆண்டு நடந்த உலகப் போட்டியில் 100 மீற்றர் பிரிவில் முதலாவதாக வந்து கிரீன் தங்கம் வென்றார். 1999 ஆம் ஆண்டு உலகப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆகிய மூன்று பிரிவுகளில் கிரீன் தங்கம் வென்றார்.

இப்போட்டியில் 100 மீற்றர் தூரத்தை 9.79 விநாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார் கிரீன். 2005 ஆம் ஆண்டு அசாபா பவல் 100 மீற்றர் தூரத்தை 9.77 விநாடிகளில் கடந்து கிரீனின் சாதனையை முறியடித்தார்.

2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர், 400 மீற்றர் அஞ்சல் ஓட்டமென இரு பிரிவுகளில் தங்கங்களை கிரீன் வென்றார். 2001 ஆம் ஆண்டு எட்மண்டில் நடந்த உலகப் போட்டியில் 100 மீற்றர் பிரிவில் தங்கம் வென்றார். அந்த ஆண்டு முதல் தொடர்ச்சியான காயங்களால் அவர் அவதிப்பட்டார்.

எனினும், 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் பிரிவில் வெண்கலம் வென்று அனைவரையும் வியக்க வைத்தார். அந்த ஒலிம்பிக்கில் 400 மீற்றர் பிரிவில் அவர் இடம்பெற்ற அமெரிக்க அணி வெள்ளிப் பதக்கம் வென்றது. 2008 ஆம் ஆண்டு தடகள போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொலைகள் மலிந்த தேசம்




சிரச்சேதம், சித்திரவதை,கொள்ளை... மறுபுறத்தில் பிரார்த்தனை,தர்மஸ்தாபனங்களுக்கு நன்கொடை இதிலென்ன வியப்பு? நாளிதழ்களில் அன்றாடம் காணும் செய்திகள் தானே இவை என சலிப்படைகிறீர்களா?

ஆம்,கொலைகள் மலிந்த தேசங்களில் அன்றாட நிகழ்வுகளாகி விட்ட இவ் அக்கிரமங்கள் சலிப்பையன்றி மகிழ்வையா தரப்போகிறது.

இவ்வாறான தேசங்களில் ஒன்றான மெச்சிக்கோவில் தீவிரமாக செயற்பட்டு வரும் போதைப்பொருள் கடத்தல் குழுக்களினால் நாளாந்தம் அரங்கேற்றப்படும் நடவடிக்கைகளே மேற்கூறப்பட்டவை.

போதைப் பொருள் கடத்தல் குழுக்களின் நடவடிக்கைளைக் கட்டுப்படுத்துவதற்காக மெக்ஸிக்கோவில் ஜனாதிபதி பிலிப் கால்டரொன் தலைமையிலான அரசாங்கம் இராணுவத்தினரை நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ள போதும் இக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்து செல்கின்றதே தவிர குறைவடைவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் 134 தொன்னுக்கும் அதிகமான எடைகொண்ட மரிஜுவானாப் பொதிகள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

முன்னெப்போதுமில்லாத நடவடிக்கையாக போதப்பொருள் வகைகளில் ஒன்றாகக் கருதப்படும் மரிஜுவானாவைக் கொண்ட 15 ஆயிரத்திற்கும் அதிகமான பொதிகளைக் கைப்பற்றியுள்ளதாக மெச்சிக்கோவின் சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் சந்தைப் பெறுமதி 340 மில்லியன் அமெரிக்க டொலர் எனத் தெரிவிக்கப்படும் அதேவேளை, கடந்த வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 123 தொன் மரிஜுவானாவே இங்கு பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடத்தல் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தின் தலைநகரமாக வர்ணிக்கப்படும் மெக்ஸிக்கோவில் தற்போது போதைப்பொருள் உற்பத்தி நடவடிக்கைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

முன்னர் ஏனைய நாடுகளிலிருந்து போதைப்பொருட்களைக் கடத்தி வந்து வேறு நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு மெக்ஸிக்கோவை ஒரு தளமாகப் பயன்படுத்தி வந்த போதைப்பொருள் குழுக்கள் தற்போது இங்கேயே உற்பத்தி நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன.

இதனால் போதைப்பொருட்களுடன் தொடர்புடைய வன்முறைகளில் நாடு மூழ்கிவரும் நிலையில் கடந்த 2006 இலிருந்து தீவிரமடைந்திருக்கும் இது தொடர்பான வன்முறைகள் 28 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களைப் பலி கொண்டுள்ளன.

உற்பத்தி மற்றும் கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு நாட்டின் எல்லைப்பகுதி நகரங்கள் முழுவதும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கடந்த பல வருடங்களாக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோதும் இங்கு கொடூரச் செயல்களுடன் கூடிய போதைப்பொருள் வர்த்தகம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

தனிநபர் ஊடாக குடும்பம்,சமூகம்,நாடு என அனைத்தையும் சீரழித்துச் சின்னாபின்னப்படுத்தும் இவ்வர்த்தகத்தின் மூலம் பில்லியன் கணக்கான டொலர் வருவாயைப் பெறும் இப்போதைப்பொருள் குழுக்கள் அடிமட்டத்திலிருந்து அதிகாரவர்க்கம் வரை செல்வாக்குச் செலுத்துகின்றன.

இங்கு இவ்வாறான பல போட்டிக் குழுக்களுக்கிடையிலான மோதல்களே அதிகளவு உயிர்களைப் பலிகொண்டு வருகின்றன.

இவர்கள் சமூகத்திலிருந்து பிரிந்து செயற்பட்டால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது இலகுவானது. ஆனால், பல பகுதிகளில் இவர்கள் சமூகத்தின் ஒரு அங்கமாகச் செயற்படுவதனாலேயே இப்பிரச்சினை விரிவாக்கம் பெற்று வருகிறது.

இங்கு சுமார் 1980 களில் உருவானதாகக் கருதப்படும் லா பமிலியா என்னும் போதைப்பொருள் குழு இங்குள்ள குழுக்களில் பலம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மெக்ஸிக்கோவின் பசுபிக் கரையோரத்தின் முக்கிய எல்லைப் பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் லா பமிலியா பலமானதொரு சமூகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எந்தவொரு வாய்ப்பையும் வீணாக்காத இவ்வமைப்பு மிகப்பெரியளவில் விரிவாக்கம் பெற்றுள்ளதுடன், இதனுடன் தொடர்பற்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது.

உற்பத்தி மற்றும் வர்த்தகத்துறையில் முதலீடுகளை மேற்கொண்டுவரும் அதேவேளை, மிசோகன் மாநிலத்திலுள்ள சட்டரீதியான வர்த்தகங்களில் 85 வீதமானவை இக்குழுவுடன் தொடர்புடையதாகவோ அல்லது இதன் நிதியுதவியுடன் இயங்குபவையாகவோ இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், பாடசாலைகள்,வடிகாலமைப்புத் திட்டங்கள் மட்டுமல்லாது தேவாலயங்கள் கூட இக்குழுவிடமிருந்து நிதிவசதிகளைப் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை எல்லாவற்றையும் விட சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் இக்குழு தமது உறுப்பினர்கள் மதுபானத்திற்கோ அல்லது போதைப்பொருளுக்கோ அடிமையாவதை கடுமையாக எதிர்க்கும் அதேவேளை, மத ரீதியான சிந்தனைகளை உறுப்பினர்கள் மத்தியில் பரப்பி வருவதாக அந்நாட்டு புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார பலத்தைப் பயன்படுத்தி அரசியல்வாதிகளை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகளையும் லாபமிலியா மேற்கொள்வதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. இக்குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 10 மேயர்களும் 20 உள்ளூர் அதிகாரிகளும் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எது எப்படியிருப்பினும் உலகில் பல கோடிக்கணக்கானவர்களின் வாழ்க்கையை சின்னாபின்னப்படுத்தும் இவ்வர்த்தகம் உலகிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

இதற்கு போதைப்பொருள் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மட்டுமல்லாது, சமூக நலன்களை அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்கங்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

லா பமிலியா போன்ற குழுக்கள் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கும் கோடிக்கணக்கானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதற்கும் வேகமாக அதிகரித்து வரும் வேலையின்மை வீதம்,சட்ட அமுலாக்கல் பிரிவுக்குள் நிலவும் ஊழல்கள் மற்றும் சமூகத்தில் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையில் நிலவும் பாரிய ஏற்றத்தாழ்வுகள் என்பனவே அடிப்படைக்காரணங்களாக அமைந்துள்ளன.

எனவே, சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முதலில் எடுப்பதன் மூலமே போதைப்பொருளுக்கு அடிமையாகுபவர்களின் தொகையைக் கட்டுப்படுத்த முடியும்.


ஏற்கனவே அடிமையானவர்களை அதிலிருந்து மீட்க முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் இதற்கு அடிமையாகுபவர்களின் தொகையை குறைக்க வேண்டுமானால் சமூகத்தின் அடிமட்டப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

எனவே, உலகளாவிய ரீதியில் புற்றுநோயைப் போல் சமூகங்களில் ஆழ ஊடுருவி வரும் இப்போதைப்பொருள் பாவனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு போதைப்பொருள் குழுக்களுக்கெதிரான நடவடிக்கைகளை மட்டுமல்லாது தூரநோக்கைக் கொண்ட சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்து அதனூடாக தனிநபர்களின் வருமானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது ஒவ்வொரு அரசாங்கங்களினதும் இன்றியமையாத கடமையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, [illegible] 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.